# வணக்கவொளி

புலத்தமிழ் காலாண்டிதழ்

இதழ்-2 VANAKKAVOLI தை 2012

உனது காலடிக்கு கீழான நிலமானது...

முகத்தார் எனும் மகத்தான கலைஞர்

அமசடக்கு நாடுகள்

ஐயோ கடவுளே!



வணக்கவொளி பரவ, அறிவொளி பரவும்

# வாசுகன் வரையும் ஓவியம்

## ( அட்டைப்படக்கவிதை )



என் விரல்கள்
ஏதோ கிறுக்குகின்றன

என் கிறுக்கல்கள்
செவ்வரத்தம் பூவாய் மலர்கிறது

புலம் பெயர்ந்துவிட்ட என் விரல்கள்
ரோசாப்பூவையல்லவா வரையவேண்டும்?

என்னிடத்திலிருந்து பெயர்க்கமுடியாப்பூவாய்
நீதான் மலர்கிறாய் செவ்வரத்தம்பூவே

என் தேசம் சிந்திய குருதியை
நினைவு படுத்தும் பூ நீதான் செவ்வரத்தம்பூவே

ஈழவீதிகளில் நடக்கும்போது
முகம்காட்டி மலரும்பூ நீதான் செவ்வரத்தம்பூவே

புலம் பெயர் வீதிகளில் ரோசாப்பூக்கள்
முகம்காட்டினாலும் என்னுள் மலரும் பூ நீ தான் செவ்வரத்தம்பூவே

ஓவியம்: ஈழத்து ஓவியர் வாசுகன்

கவிதை: வி.பாஸ்கரன்

# வணக்க ஒளியினிலே

வணக்கவொளியின் வணக்கம்
சொல்லக் கொஞ்ச விசயங்கள்
அன்பு
உனது காலடிக்கு கீழ் உள்ள நிலமானது...
எது ஊனம்?
வளர்த்த நாய் முகத்தைப் பார்த்த மாதிரி!
என் நெஞ்சுக்குள் எரியும் தீ
முகத்தார் எனும் மகத்தான கலைஞர்
இனிய தமிழ் மக்களே!
மலையகப் பார்வையில் நாட்டார் இலக்கியம்
அமசடக்கு நாடுகள்
கனவு காண்பதற்குரிய காரணங்கள்
ரணங்கள் நூல் வெளியீடு
அயற்சொல் — தனித்தமிழ்
வாத்தியாரும் கழுதையும்
என்னம்மா சாப்பாடு
எரிகாயங்கள்
நம்ம ஊரு நல்ல ஊரு
சிறுவர் வளர்ப்பில் சிறப்பான வழிமுறைகள்
பொய்யாமொழி என்றும் பொய்யா மொழியே!
ஐயோ கடவுளே!
பிரெஞ்சுப் பெண்களும் நீள் காற்சட்டை...
'அ' களும் 'மு' களும்
மனிதனுக்கு தேவை நம்பிக்கை
புடம்
கல்வி என்பது, சாதாரணம் என்பது
சுவையான செய்திகள்
வளரும் பயிர்கள்
நேசமுள்ள வாசகர்கள்

**ஆசிரியர்**
வி.பாஸ்கரன்

**இதழ் வடிவமைப்பு**
து.பிரபாகரன்

**கணனி எழுத்து**
பா.ஜெயராணி

**இணை ஆசிரியர்**
வி.மோகனதாசன்

**தொடர்புகட்கு**
வணக்கவொளிக் குழுமம்
vanakkavoli@yahoo.fr

# வணக்க ஒளியின் வணக்கம்

வி.பாஸ்கரன்
"வணக்கவொளி" குழுமம்

கார்த்திகை இருபத்தியேழை கடந்துவந்திருக்கின்றோம். மாவீரர் தினம் எமது எல்லாக்காலங்களின் அரசியல் நிகழ்வுகளையும் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிடும்நாளாக அமைந்து விடுகின்றது. இந்த நாளில் எமது வெற்றிகள், இழப்புக்கள்,பின்னடைவுகள்,சோகங்கள் எல்லாம் எமது இதயங்களில் இழையோடியிருக்கும் நாளாகவும் அமைந்து விடுகின்றது. மாவீரர்களின் உயிர்த்தியாகங்களை ஒரு கணம் மனதில் நினைத்தால் மனம் நெகிழ்ந்து கண்ணீர்த்துளிகள் கரைதட்டும் எல்லாமாவீரர்களின் முகங்களும் எமக்கு நினைவில் இல்லாமல் இருக்கலாம்? ஆனாலும் முகந்தெரியாத மாவீரர்களுக்காவும் கண்ணீர் சிந்துகின்றோமென்றால் எமது இனத்தின் விடுதலைக்காக ஈந்த உயிர்த்தியாகங்கள்தான் காரணம்.

மாவீரர் தினம்தான் எமது சிந்தனையை தூண்டிவிடும் நாளாகவும், எம்மை இயங்க வைக்கும் நாளாகவும் அமைந்து விடுகின்றது. மாவீரர்கள் போர்க்களங்களில் எவ்வளவு தீரமாக போராடினார்கள் என்பது எம்மை விட சிறீலங்கா அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் தெரியும். அதனால்தான் துயிலும் இல்லங்களை தரைமட்டமாக்கி–யிருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களின் மனங்களை தரைமட்டமாக்க முடியாததென்பதை யாழ்ப்பாணத்தில் ஒட்டப்பட்ட மாவீரர் தினச் சுவரொட்டிகள் சான்று பகர்கின்றன.

துயிலும் இல்லங்கள் இடிக்கப்பட்டதானது மக்களை மானபங்கப்படுத்துவதற்கு ஒப்பான செயலாகும். சிறீங்காவின் அரசியல் வாதிகள் எல்லா இன, மத, மொழியைச் சேர்ந்தவர்களையும் சமமாக வழிநடத்தக்கூடிய அரசியல் பண்பாட்டை பெற்றுவிடவில்லையென்பதை இது காட்டி நிற்கின்றது. நாம் புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளில் சரிசமமாக வாழ வாழ்வுரிமை எமக்கு வழங்கப்பட்டுள்ளதானது ஐரோப்பியர்களின் அரசியல் உயர்பண்பை வெளிக்காட்டி நிற்கின்றது. இத்தகையதொரு அரசியல் உயர்பண்பை அடைவதற்கு சிறீலங்கா அரசியல் வாதிகளுக்கு இன்னுமொரு கால் நூற்றாண்டு பிடிக்கலாம். எட்டப்படாத அரசியல் பண்புகளுடன் பதவிகளில் இருக்கும் சிறீலங்காஅரசியல் வாதிகளால் தமிழர்களுக்கான தீர்வை முன்வைத்து விடமுடியாதென்பது நிருபணமாகி வருகின்றது. சர்வதேச அழுத்தங்களின் வாயிலாக தமிழர்களுக்கான தீர்வு எட்டப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆனால் இது ஏதோ அதிசயம் நிகழ்வது போல் நடந்து விடாது. தற்போதைய உலகமயமாக்கல் கொள்கைகளுக்கூடான உலகின் பொருளாதார வர்த்தக மாற்றங்களை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர்களும், பொருளாதார, வர்த்தக, கல்வி, அரசியல் விடயங்களில் புறம் தள்ள முடியாத ஒரு சக்தி என்பதை நாமும் நிரூபித்தாக வேண்டும்.

புறம் தள்ள முடியாத சக்திகளை உலகத்திற்கு தலைமை தாங்கும் நாடுகள் புறம் தள்ளாமல் இருப்பதுதான் அரசியல் யதார்த்தமாக இருக்கின்றது. இச்சூழலில் தாயக மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்காக அரசியல் ராஜதந்திர பேச்சுக்களை நிகழ்த்தலாம்.

நாம் வந்த பாதையை மறந்து விட்டு வணக்கவொளி இதழ்பற்றி எழுதுவது மனச்சாட்சியோடு பொருந்தி வாழாத்தன்மையை காட்டி நிற்கும்.

இனி விடயத்திற்கு வருவோம். வணக்கவொளி நூல் வெளியீட்டு விழாவிற்கு கணிசமான தொகையினர் சமூகமளித்து தமது நல் ஆதரவை வெளிப்படுத்தி யிருந்தார்கள். அவர்களுக்கான நன்றியை இந்த இதழில் பதிவு செய்கின்றோம்.

நாம் எதிர்பார்த்த தொகையை விட குறைவானவர்கள்தான் சமுகமளித்திருந்தார்கள். அதற்கு அன்றைய தினம் இன்னும் சில தமிழர் நிகழ்வுகள் நடைபெற்றதும் ஒரு காரணமாகும்.

நாம் எதிர் பாராத விதமாக நூல் வெளியீட்டு விழாவில் கலாநிதி திரு. முருகன் குணசிங்கம் அவர்கள் கலந்து கொண்டு வெளியிட்டு வைத்ததானது மனதில் கவலை இருந்த இடத்தில் மகிழ்ச்சி வந்து நிறைத்து விட்டது. அவரின் வரவு பெறுமதியானது. எமக்கான பொறுப்பையும் அதிகப்படுத்தியிருக்கிறது. அவர் பேசும் போது காட்டிய ஒணான் உதாரணத்தை என்னால் இலகுவில் மறந்து விட முடியவில்லை. இதழ் வெளியீடானது வேலியில் போன ஒணானை தூக்கி மடியில் விட்டதை போன்றதென ஒப்பிட்டிருந்தார். பொருத்தமான ஒப்பீடுதான் என்பது பட்டறிவில் புரிகிறது. காலாண்டிதழ் ஒன்றைத்தானும் வெற்றிகரமாக வெளியிடுவதிலுள்ள சிரமங்கள் புரிகின்றது. நாம் சிரமங்களை கருத்தில் கொண்டால் எமக்கான வாழ்வை, வரலாற்றை பதிவு செய்யும் கடமையிலிருந்து தவறி விடுவோம்.

எமது நல்ல நோக்கத்தை – புரிந்துகொண்ட ஒரு சில வர்த்தகர்கள் எமக்கு உதவ வந்திருப்பது கொஞ்சம் மனதிற்கு ஆறுதலைத் தருகின்றது. இன்னும் மொழிப்பற்றுள்ளவர்கள், நாட்டுப்பற்றுள்ளவர்கள் எம்மிடம் வருட சந்தாவை பெற்றுள்ளார்கள். இவர்கள்தான் வணக்கவொளிக்கான அத்திவாரத்தை இட்டுள்ளனர். ஆனால் இந்த சொற்ப அளவு ஆதரவு மட்டும் இவ்விதழை வெற்றிகரமாக கொண்டு செல்ல போதுமானதல்ல. நாமும் பொறுப்போடு செயற்படும் பட்சத்தில் மேலும் பலர் எம்மோடு இணைந்து ஊக்கு விப்பார்கள் என்ற நம்பிக்கையோடு உங்களை இரண்டாவது இதழில் சந்திக்கின்றோம்.

**மீண்டும் அடுத்த இதழில்...**

திறன் ஆய்பவனை கணக்கில் கொள்ளலாகாது. வலுவானவனின் சறுக்கல்களை எடுத்துரைப்ப வனுக்கோ, செயலாற்றுபவனின் குறைநிறைகளை சுட்டிக் காட்டுபவனுக்கோ அருகதை இல்லை. களத்தில் இருப்பவனுக்கே பெருமை அனைத்தும் சேரும். எவன் ஒருவன் முகத்தில் புழுதி, வியர்வை மற்றும் குருதியினால் ஏற்பட்ட வடுக்கள் இருக்கின்றனவோ, அதிவீரத்துடன் போராடுகின்றவனோ தவறு செய்திட்டாலும் மீண்டும், மீண்டும் போராட வருபவனோ, பேரார்வமும், கடும் ஈடுபாடும் அறிந்தவனோ, மகத்தான காரணத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவன் எவனோ, இறுதியில் வெற்றியின் உயர்ந்த சாதனையைப் பற்றி அறிந்தவனோ, குறைந்தபட்சம் தோற்றுப் போனால், மிகத்துணிவுடன் போராடித் தோற்றோம், ஆதலினால் வெற்றி தோல்வி என்று எதுவுமே அறியாமல் அஞ்சி வாழ்கின்ற ஆத்மாக்களுக்கிடையே, அவனுக்கு இடமில்லை என்று தெரிந்து இருப்பனுக்கே அனைத்து பெருமைகளும் சேரும்.

– தியோடர் ரூஸ்வெல்ட் –

# சொல்லக் கொஞ்ச விசயங்கள்

வி. மோகனதாசன்

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னதாகப் பேசப்படுகின்ற முக்கியமான விடயங்களிலொன்று தமிழர்களிடையே ஒற்றுமையில்லை என்பதாகவும் தமிழர் தரப்பு பெருத்த பின்னடைவைச் சந்தித்ததற்கான காரணங்களில் இதுவும் ஒன்று.

தமிழர்களிடையே ஒற்றுமை இல்லை என்று சொல்வதில் தமிழர்களிடையே 'ஒற்றுமை' இருக்கின்றது. பிற இன மக்களோடு ஒப்பிடுகையில் தமிழர்களிடையே கூட்டுணர்வு, ஒற்றுமையுணர்வு என்பன சற்றுக்குறைவாகவே காணப்படுகின்றது என்பதனை வரலாற்றுச் சான்றுகளோடு எடுத்துரைக்கின்ற அறிஞர்கள் இருக்கிறார்கள்.

தமிழரசர்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமையின்றி சண்டையிட்டுக் கொண்டிருந்ததனாலேயே எதிரிகள் நுழைவதற்கான வாசல்களை திறந்துவிட்டன என்று அவர்கள் அடித்துக் கூறுகின்றனர். அரசாட்சிபோய் குடியாட்சி என்ற நிலையை எட்டியபோதும் எதிரிகளோடு தங்கள் நலன்களுக்காகத் துணைபோகின்ற குணம் மட்டும் விட்டபாடில்லை! சில தமிழ் அரசியற் தலைவர்களின் சுயநலன்பேண் அரசியல் தமிழர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க எவ்வாறு தடையாக இருந்தது என்பதையும் நாம் அறிவோம்.

தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு இந்தத் 'தனித்த' குணம் என்றால் என்ன? இது அவனது பலமா? பலவீனமா? என்று யோசிக்கத் தூண்டுகின்றது. கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் ஒருவர் சொன்னார்? தமிழர்கள் தனித்து நின்று முயல்கையில் வெற்றியாளராகவும், ஒன்றிணைந்து முயல்கையில் தோல்வியாளர்களாகவும் மாறி விடுகின்றனர்? என்றார் கேட்டுக் கொண்டிருந்த தமிழர்கள் அவர் சொன்னதை ஏற்பதுபோல கரவொலி எழுப்பி ஆரவாரித்தனர்! உண்மை யில் நாங்கள் அப்படித்தானா? நாம் யோசிக்க வேண்டும். எங்களிடம் கூட்டுணர்வு ஏன் இல்லாமல் போயிற்று? நம்மிடையே ஒற்றுமையுணர்வு வருவதற்கு தடைதான் என்ன? நாம் யோசிக்க வேண்டும்.

நாம் பிற இன மக்களோடு சேர்ந்து பணிபுரிகின்ற சமயங்களில் தமிழர்கள் கடின உழைப்பாளிகள், ஆற்றல் மிக்கவர்கள், அன்பானவர்கள், ஒற்றுமையுணர்வு உள்ளவர்கள் என்று பாராட்டப்படுகின்றோம். ஆனால் தமிழர்கள் ஒன்றிணைந்து வேலை செய்ய வேண்டி வந்துவிடுகின்றபோது மட்டும் நான் பெரிதா? நீ பெரிதா? என நமக்குள்ளே உள்ள 'குணம்' சன்னதம் ஆடத் தொடங்கி விடுகின்றது.

ஒவ்வொரு மனிதரும் தனித்துவமான குணங்களை கொண்டவர்கள்தான் விருப்பு, வெறுப்பு, கருத்து, மாற்றுக்கருத்து என்று ஆளாளுக்கும் வேறுபடலாம். அது இயல்புதான். ஆனால் இனநலன் கருதி நாம் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய இடங்களில் ஒன்றுபட்டு நிற்கவில்லை என்றால் அது நம் இனத்துக்கே அழிவினைத் தந்து விடாதா? தேவையற்ற முரண்களில், தேசத்திற்கு செய்ய வேண்டிய பணிகளை நாம் செய்ய மறந்து விடுகின்றோம். செய்ய வேண்டிய பணிகள்

கவனிப்பாரற்றுக் குவிந்துபோய்க் கிடக்க வீண் வாதங்களில் நேரத்தை தொலைத்துக் கொண்டிருக்கின்றோம்!

தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! என அறைகூவல் விடுத்ததுபோல் உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள்! என அறைகூவல் விடுப்பது அவசியமாகப் படுகின்றது.

தமிழரின் பலம் என்பதும் விடுதலை என்பதும் உலகத்தமிழரின் ஒற்றுமையிலேயே உண்டாகும்.

சுதந்திர புருசனாகப் பிறந்த மனிதனுக்குச் சிந்திக்கவும் அதைச் சொல்லவும் உரிமையுண்டு என்று போர்முரசு கொட்டிய வால்டேர், மக்களனைவரையும் நோக்கி, 'நீங்களே சுயமாகச் சிந்தியுங்கள்' என்று ஓயாமல் குரல் கொடுத்தார். ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கி விட்டால், அதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது!

# அன்பு

தொகுப்பு பா.ஜெயராணி

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?

— வள்ளுவர் —

2. நாம் நயந்து போற்ற வேண்டிய தெய்வங்கள் நமது நாட்டு மக்களே ஆவர். நாம் ஒருவரோடொருவர் பொறாமை கொண்டு போராடுவதை ஒழித்து, ஒருவரை ஒருவர் போற்றி அன்பு செய்வோமாக!

— சுவாமி விவேகானந்தர் —

3. அன்பின்மை அதிக விளைவுக்கு ஏதுவாகலாம். என் உயிரையே உடலிருந்து பிரித்து விடலாம். ஆனால் மாசற்ற என் அன்பை வெறுக்க முடியாது.

— செகசிற்பியர் —

4. நான் கடினமாக இருப்பது கருணையோடிருப்பதற்கே.

— செகசிற்பியர் —

5. கிறீஸ்தவம் அறிவிலும் பார்க்க அன்பே மேலானதென மக்களுக்கு விளக்கியுள்ளது.

— ஐகுயிஸ்மரிரெயின் —

6. உள்ளங் கனிந்தபோதெல்லாம் உவந்து வந்து பாடுவன்.

— சம்பந்தர் —

7. தன் நாட்டில் அன்பு கொண்டவன் மனித குலத்தை வெறுக்க முடியாது.

— சார்ள்ஸ் சர்ச்சில் —

8. யாரினும் இனியன் பேரன் பினனே.

— வடமன் தாமோரன் —

9. பெருந்தகைமைகளைக் காண்பதிலோ பிறர்க்கு அன்பு செய்வதிலோ இன்பம் காண்பதே, கருணையின் முழு உருவம்.

— ரஸ்கின் —

10. அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.

— ட்ரைடன் —

# உனது காலடிக்கு கீழுள்ள நிலமானது...

கலாநிதி குணராசா (செங்கை ஆழியான்)

ஒன்ராறியோவிலிருந்து இரண்டுமணி நேரக் கார்ப்பயணத்தில் குறுக்கிடும் கிராமம் பீற்றர்ஸ் புருக். 401 நெடுஞ்சாலையில் பயணப்பட்டு நகரத்தின் மையப்பகுதியிலிருந்து நகரின் பின்னணியில் புகும்போது கனடாவின் அழகு புலப்படத் தொடங்கும். பேர்ச் மரங்களும் மேபிள் மரங்களும் அடர்ந்து இருமருங்கும் காணப்பட, இடையிடையே பரந்த தானிய வயல்கள் விரிந்து கிடக்கின்றன.

பீற்றர்ஸ்புருக் பிரதான வீதியிலிருந்து விலகி உள்ளே சில மைல்கள் செல்லில் மாமோறா என்ற பிரதேசத்தில் நூறாண்டுகளுக்கு முற்பட்ட கனடாவின் கிராமம் ஒன்றினைக் காணலாம். இன்று தம் அடையாளங்களை இழந்துவிட்ட செவ்விந்தியர்கள் தம் அடையாளத்தைப் பேணும் வகையில் இந்த மாதிரிக் கிராமத்தை அமைத்து வைத்திருக்கிறார்கள்.

கனடா என்றால் செவ்விந்தியர்களின் வார்த்தையில் 'கிராமம்' என்றர்த்தப்படும். ஆம் கனடா செவ்விந்தியர்களின் தாயகம் அந்த மாதிரிக் கிராமத்தில் செவ்விந்தியர்களின் புராதனக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தோல்களுக்குப் பலநிறச்சாயமிட்டு மிக அழகாக அமைத்திருந்தனர். கூடாரங்களுக்கு அருகில் அவர்கள் முன்னர் பயன்படுத்திய சின்னங்கள் மரக்குற்றிகளில் செதுக்கப்பட்டுக் காணப்பட்டன. செவ்விந்தியர்களின் இன அடையாளத்தையும் ஆள்புல உரிமையையும் வலியுறுத்தும் சின்னங்கள் இவை. ஆங்கிலேயரும் பிரான்சியரும் தங்களை ஆக்கிரமித்துக் கொண்ட வரலாற்றை நினைவுபடுத்தும் வகையில் அவர்கள் பயன்படுத்திய கோச்சுவண்டி அம்புலன்ஸ் வண்டி என்பனவும் காணப்பட்டன. ஆக்கிரமிப்பாளர்களால் மரத்தால் அமைக்கப்பட்ட வீடுகளும் கட்டிடங்களும் அங்கு காணப்பட்டன. சப்பாத்து அணிந்த கால்கள் வெளித்தெரிய அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் மாதிரி மண்பிட்டிகளைக் கொண்ட மயானமும் அங்கு காணப்பட்டது. அடையாளம் இழந்து போன ஒரு மானிடக்குழுவின் எச்சங்களாக அவை தெரிந்தன.

நானும் என்னை அழைத்து வந்த செல்வராசாவும் வியப்புடன் அவற்றினைப் பார்த்துக் கொண்டு நிற்கும் பொழுது, ஒரு வயோதிப மனிதன் எங்களை நோக்கி மெதுவாக வந்தான். அவன் நடையில் கம்பீரமும் முகத்தில் இறுகிப் போன வைராக்கியமும் தெரிந்தன. கருமையான மயிர்கள் வெளுத்து நரைத்திருந்தன. கருவிழிகள் எங்களை ஆழமாக ஊடுருவின. பரந்த சிவந்த முகம் மொங்கோலிய இனத்தினை அந்த மனிதன் எனக்கு நினைவு படுத்தினான். நிச்சயமாகச் செவ்விந்தியனாகத்தான் இருக்க வேண்டும்.

1492 ஆம் ஆண்டு கடலோடி கொலம்பஸ் இந்தியாவிற்கு மேற்குப்புறமாகப் பாதையொன்றினைக் காணவேண்டிப் புறப்பட்டு அத்திலாந்திக் சமுத்திரத்தினைக் கடந்து அமெரிக்காவின் சில தீவுகளை அடைந்தான். தான் கரையிறங்கிய பிரதேசம் இந்தியாவென அவன் கடைசி வரை நம்பினான். அந்த நம்பிக்கையில் அவன் அங்கு கண்டசுதேசிகளை இந்தியர்கள் என குறித்துச் சென்றான். 1497 அமெரிக்கக் வெஸ்பூசியஸ் என்பான் கொலம்பஸ் கண்ட பாதையில் பயணப்பட்டு

அமெரிக்கக் கண்டத்தினைக் கண்டறிந்து அத்திலாந்திக்கில் புதியதொரு கண்டம் இருப்பதை நிலைநாட்டினான். கொலம்பஸ் குறித்த இந்தியர்கள் அமெரிக்கச் சுதேசிகன் எனப் புரிந்ததால் இந்தியர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்தும் நோக்கில் அவர்கள் செவ்விந்தியர்கள் என்றழைக்கப்பட்டனர்.

கனடாவின் ஆதிக்குடிமகன் எங்கள் முன் நின்றிருந்தான். 'நீங்கள் யார்?' என்று ஆங்கிலத்தில் வினவினான். உச்சரிப்பில் சுத்தம் இல்லை. 'நான் இலங்கையில் இருந்து வந்திருக்கிறேன். சுற்றுலாப்பயணி' என்ற போது அவன் 'வெல்கம்' என்றான். பின்னர் என்னுடன் வந்த செல்வராசாவை நோக்கி விழிகளை உயர்த்திய போது 'நான் ஒரு கனேடியன்' என்று அவர் கூறினார். வயோதிபச் செவ்விந்தியனின் முகம் கடுகடுத்துக் கொண்டது. நோ... ஐ ஆம் கனேடியன். யூ ஆர் ஏ சிற்றிசன். இல்லை, நான்தான் கனேடியன். நீங்கள் பிரசாவுரிமை பெற்றவர்கள்.

காரில்ஏறிப் பயணப்படும் போது என் நினைவிலும் மனதிலும் அந்த மனிதன் கூறியவார்த்தைகள் அடிக்கடி எழுந்து கொண்டிருந்தான். 'நாங்கள் தான் கனேடியர்கள்' என்றான். காரில் ஏறும் போது கரங்களை அசைத்தான். அவ்வளவுடன் நின்றிருந்தால் பரவாயில்லை. 'திஸ் ஸ்மை லான்ட' இது என் பூமி...என்று தன் மார்பில் தட்டிக்கொண்டான். மரம் ஒன்றில் பொல்லால் தட்டிய சத்தம் எழுந்தது. நான் சற்றுத்திகைத்து விட்டேன். என்னை அழைத்து வந்தவர் எது வித பதட்டமும் அடையவில்லை. இவர்கள் இப்படித்தான். கனடாவின் ஆதி மக்கள் நேற்றிவ்ஸ்கனாவின் முதலாவது பிரசைகளாகச் சட்டப்படி இவர்கள்தான் கருதப்படுகின்றனர். இவர்களுக்கு இந்த நாட்டிற் கிடைக்கின்ற சலுகைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஒவ்வொருவருக்கும் வெல்பயர் காசு கிடைக்கிறது. பொருட்களுக்கு விற்பனை வரியில்லை. நேற்றிவ்ஸ் என்ற அடையாளத்தை நிறுவியதும் சலுகையுள்ளது. கிடைக்கின்ற பணத்தைக் கண்டபடி இறைத்துச் செலவிடுவர். போதை வஸ்த்து பாவிப்பர். பனிக்குளிர் இவர்களை எதுவும் செய்வதில்லை. கடும் பனி கொட்டும் வின்ரரில் நள்ளிரவில் குடித்துவிட்டு வீதியில் ஆர்ப்பாட்டம் செய்வர். வீதியோரத்தில் விழுந்து கிடப்பர்.

செவ்விந்தியர்கள் பரிதாபத்திற்குரியவர்கள் எனப்படுகிறது. அமெரிக்கக் கண்டங்களில் தன்னிச்சையாக சுதந்திரமாகவும் வேட்டையாடி அலைந்து இயற்கையின் குழந்தைகளாகத் திரிந்தவர்களை அமெரிக்கக் குடியேற்றங்கள் அழித்து விட்டன. இயற்கையின் குழந்தைகள் நவநாகரிக அசுர கரங்களுக்குள் முடக்கப்பட்டு விட்டனர். தம் அடையாளங்களை படிப்படியாக இழந்துவிட்டனர். கனடாஅரசு அவர்களுக்கு வழங்குகின்ற சலுகைகள் அனைத்தும் அவர்களின் கிளர்ந்தெழலைத் தடுப்பதற் காகவும் தாங்கள் அச்சுதேசிகளுக்கு இழைத்து விட்ட கொடுமைகளுக்குப் பரிகாரம் செய்வது போலவும் எனக்குப் படுகின்றன. அவை தான் உண்மை. இலங்கையின் சுதேசிகளாக நாகரும் இயக்கரும் கூட விஜயனின் வருகைக்குப் பின்னர் நிகழ்ந்த சிங்களக் குடியேற்றங்களால் ஆள் ஆக்கிரமிப்பிற்கும் கலாசார ஆக்கிரமிப்பிற்கும் உள்ளாகிப்போன மானிடச் சோகம் நினைவுக்கு வருகிறது.

அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட போது இவ்விரு கண்டங்களிலும் வாழ்ந்த செவ்விந்தியர்களின் தொகை ஏறத்தாழ 45 இலட்சங்கள் எனக் கணிக்கப்பட்டது குடியேற்றங்கள் உருவான போது செவ்விந்தியர்கள் எதிர்ப்பிற்கு ஈடுகொடுத்து, செவ்விந்தியரின் சடலங்களின் மேலே தான் அமெரிக்கக்குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. இப்பொழுது கனடாவிலும் ஐக்கிய

அமெரிக்காவிலும் 5 இலட்சம் செவ்விந்தியர்கள் உள்ளனர். மெக்சிக்கோவில் இந்த எண்ணிக் கை அதிகம். இருபதாயிர மாண்டுகளாக 'அமெரிக்கக் கண்டங்களில்' வாழ்ந்து நிலைத் திருந்த இனத்தின் அழிவு இவ்விதமாக அருகிப் போனமைக்குக் காரணங்கள் பல வாகும். முக்கியமானது அமெரிக்கச் சுதேசிக ளிடம் நெருங்கிய ஒற்றுமை இருக்கவில்லை. அவர்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து தம் ஆள் புலங்களை நிறுவிக் கொண்டிருந்தனர். வேட்டை யாடுபவர்கள் காய்கனிகளைத் தேடி யுண்பவர்கள் என்ற விதத்தில் மட்டுமே அவர் களிடம் ஒற்றமை இருந்தது. பல்வேறு இனக் குடும்பங்களாக அவர்கள் விளங்கினர். கரீப், ஆராவக், மாயன்ஸ், வெறவேறாக்காம், நாசிஸ், குவாக்கியூட்டல், வெறய்சா டிலிங்கிட், எஸ்கி மோவர் எனப் பல பிரிவுகள். இருநூறுக்கு மேற்பட்ட மொழிகளை அவர்கள் பேசினார்கள். அவை 53 மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த வை இவ்வாறு அவர்களிடம் காணப்பட்ட பிரிவினைகளும் நவீன தொழில்நுட்பங்களின் விளைவாக ஆங்கிலேய, பிரான்சிய, ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுதங்களுக்கு எதிர் நிற்க முடியாமையும் அமெரிக்கக் கண்டங்க ளை இழக்க வைத்தன.

மிகப் பண்டை காலத்தில் இருந்தே கனேடிய செவ்விந்தியர்கள் இப்பிரதேசங்களில் பரவி வாழ்ந்து வந்திருக்கின்றனர். கிறீன்லாந்தில் இருந்து அலாஸ்கா வரையிலான நிலப்பர ப்பில் வாழ்ந்திருந்த இம்மக்களின் பூர்வீகம் மத்திய ஆசியா எனக் கருத்தப்படுகிறது. இவர்கள் ஆசியாக் கண்டத்தில் இருந்து பெரிங் தொடு கடலூடாக அலாஸ்காவிற்குள் வந்தவர் கள் எனக் கருதப்படுகிறது. ஆசியாவையும் அலாஸ்காவினையும் இணைத்து பெரிங் தொடு கடலை மேவி நிலப்பாலமொன்று இருந்திருக்க வேண்டுமெனவும் அதனூடாக இடம்பெயர்ந்து கனடாவினுள் குடி புகுந்தனரெனவும் நம்பப் படுகிறது. இவ்வாறு தான் இலங்கையையும் இந்தியாவையும் இணைத்த நிலப்பாலத்தினூ டாக சேது பந்தன மூடாக திராவிட இன மக்கள் விஜயனுக்கு முன்னர் நாகர்களாகவும் இயக்கர் களாகவும் இலங்கையில் வந்து புகுந்து நிலைத் திருந்தனர் என நான் எண்ணிக் கொண்டேன்.

கனடாவின் பரந்து விரிந்த சமவெளிகளில் சிதறி வாழ்ந்த செவ்விந்தியர்கள் இன்று நவீன நாகரிகத்தின் கரங்களுள் உள்வாங்கப்பட்டு அடையாளங்களை இழந்துவிட்ட போதிலும் கனடா தங்களது நிலம் என்பதை மறந்து விடவில்லை. கனடாவின் முதற்பிரஜைகள் என்ற அரசியல் அந்தஸ்தும் ஏனைய குடியேற்ற வாசிகளுக்கு இல்லாத பல்வேறு சமூகப் பொருளாதாரச் சலுகைகளும் அவர் களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் அவர்களின் உள்ளங்களில் இயற்கையின் மனிதர்களாக அப்பரந்த நிலப்பரப்பிற்கு உரி மையுள்ளவர்களாக வாழ்ந்த வாழ்க்கையின் இனிமையையும் சுதந்திரத்தையும் மறந்து விட முடியவில்லை. ஐரோப்பியர்கள் கனடாவின் கரைகளில் கால்களைப் பதித்த காலத்தில் கனாடவின் பெரும்பகுதிகளில் வசித்த செவ் விந்தியர்கள் தங்களுக்கென அரசியற் கொள் கைகளையும், சட்டங்களையும் தமக்கென சிறப்பான பழக்கவழக்கங்களையும், சடங்கு களையும் கொண்டிருந்தனர். ஐரோப்பியருட னான தொடர்ந்த யுத்தம், பரவிய கொள்ளை நோய்கள், ஆக்கிரமிப்புக்குள்ளான நிலப் பிரதே சக் குறுக்கம், வேட்டை விலங்குகள் அரு கியமை முதலான பல காரணிகள் கனடாவின் செவ்விந்தியர்களின் தொகை மூன்றிலொன்றாக மாறிவிட்டது எனினும் கனடாவின் இந்தச் சுதேசிகள் தம் உரிமைகளை நிலை நாட்டுவதற்கான கோரிக்கைகளைக் காலத்துக் காலம் முன்வைத்தனர். தங்கெளுக்கென ஒரு தனி ஆள் புலம் தேவையென வாதிட்டனர். அதன் பயனாக 1999 ஆம் ஆண்டு

அவர்களுக்கென நுனாவுட் என்ற ஒரு மாநிலம் உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. நுனாவுட் என்றால் அர்த்தம் 'எங்கள் நிலம்' என்பதாகும். கனாடவின் வட பாகத்தில் பனி படர்ந்த ஆக்டிக் பிரதேசத்தில் நுனாவுட் மாநிலம் அமைந்துள்ளது. இப்பகுதியில் பெரும் தொகையினாராக வாழ்ந்து வரும் 'இன்யூட்' என்ற செவ்விந்திய சுதேசிகளுக்கும் கனடா அரசுக்கும் இடையில் நிகழ்ந்த ஒப்பந்தின் படி இந்த மாநிலம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஆயிரமாயிரமாண்டுகளாக இப்பகுதியில் வசித்து வரும் மக்களின் ஆள்புல உரிமையை கனேடிய அரசு மதித்திருக்கிறது.

ஆரம்பத்தில் இருந்தே மாநிலங்கள் சுயாதிபத்திய உரிமையை மதிக்கும் பண்பு கனடாவில் இருந்து வருகிறது. கனடாவின் முதற்பிரதமராக விளங்கிய சேர்.ஜோன் அலெக்சாண்டர் மக்டொனால்ட் 1867 இல் வட அமெரிக்கச் சட்டப்படி முதலில் ஒன்ராறியோ, குயிபெக், நோவாகோசியா, நியுபவுன்ஸ்விக் ஆகிய மாநிலங்கள் கனேடியக் குடியரசில் இணைந்து கொண்டன. பின்னர் மாவிற்றோபோ, பிரித்தானியா கொலம்பிய, பிரின்ஸ்போவார்ட் தீவுகள், சஸ்கற்சிவான, அல்போட்டா ஆகிய மாநிலங்கள் இணைந்து கொண்டன. 1949 இல் நியூபவுன்லாந்து இணைந்து கொண்டது. இன்று 1999இல் செவ்விந்திய மாநிலமான நுனாவுட் தனக்கென்ற தனியரசுசுடன் கனாடவின் குடியரசில் இணைந்து கொண்டிருக்கின்றது.

எனது கனடாப்பயணம் நிகழ்வதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் தான் நுனாவுட் மாநிலம் அங்கீகரிக்கப்பட்டது. காரில் செல்வராசவுடன் பயணப்படும் போது நுனாவுட் மாநிலத்தின் உருவாக்கம் மனதில் எழுந்து கொண்டிருந்தது. பீற்றர்ஸ் புரூக்கிலிருந்து ஒன்ராறியோ நோக்கிப் பயணப்பட்டோம். செவ்விந்திய மாதிரிக் கிராமத்தில் 'இது என் நில நாடு' என்று மார்பில் அறைந்த அந்த மனிதனை எண்ணிக் கொண்டேன். அத்துடன் ஆங்கில அரசுடன் தன் பிரதேசத்தை தன்னின அழிவைக் காப்பற்றுவதற்காக இறுதியில் விட்டுக் கொடுத்த செவ்விந்திய தலைவன் சியாட்டில் (சியாட்டில் வாசகம் எனப்படும்) என்பானின் வார்த்தைகள் நினைவில் எழுந்தன.

நாங்கள் நிலத்தினை விற்காவிட்டால் வெள்ளையர்கள் துப்பாக்கிகளுடன் வந்து எமது நிலத்தை எடுத்து கொள்வார்கள். எப்படி நீ வானத்தை நிலத்தின் வெப்பத்தை விற்கவோ வாங்கவோ முடியும்? இப்பூமியின் ஒவ்வொரு பகுதியும் எனது மக்களுக்குப் புனிதமானது. இந்த அழகான பூமியை நாம் இழந்த பின்பும் மறந்துவிடுவதில்லை. இது செவ்விந்தியனின் தாய். நாங்கள் பூமியின் ஒரு பகுதி. அருவிகளிலும் ஆறுகளிலும் அசைந்து செல்லும் பளிச்சென்ற நீரானது உண்மையில் வெறும் நீரன்று அது எமது முன்னோரின் இரத்தம் உங்கள் நகரங்களின் காட்சிகள் செவ்விந்தியனின் கண்களுக்கு வலியை ஏற்படுத்துகின்றன. பூமி எங்களுக்கு சொந்தமானதல்ல. மனிதன் தான் பூமிக்குச் சொந்தமானவன். வெள்ளை மனிதனின் நகரங்களில் அமைதியான இடம் எதுவுமில்லை.

**உனது காலடிக்குகீழுள்ள நிலமானது எமது மூதாதையாரின் சாம்பல் என உன் குழந்தைகளுக்கு சொல்லி வை.**

உண்மை பூட்டி வைக்கப்படும் பொக்கிஷம் அல்ல. அது உரிமைப் போராட்டத்தின் வெற்றிக்கொடி! அது பலமுறைகள் கிழிக்கப்படலாம்! ஆனாலும் அது அழியாதது!




'வணக்கவொளி' முதலாவது இதழ் வெளியீட்டு விழாவில் வில்லியனுபெல் தமிழ்ச்சோலை மாணவர்களின் நடனநிகழ்வு







'வணக்கவொளி' முதலாவது இதழை கலாநிதி முருகர் குணசிங்கம் வெளியீட்டு வைத்தபோது

# வளர்த்த நாய் முகத்தை பார்த்த மாதிரி...

சர்வதேசிகன்

பாரிசில் வேலை முடிந்தால் என்னையறியாமல் மகிழ்ச்சிவரும். மகிழ்ச்சி வந்தவுடன் la chapelle சென்று டீ குடித்தால் என்ன? என்று மனம் கேட்கும். மனம் போன போக்கிலே la chapelle சென்று கொண்டிருந்தேன்.

சர்வ சாதரணமான இரு தமிழ் இளைஞர்கள் 'வளர்த்த நாய் முகத்தைப் பார்த்த மாதிரி' என பேசிகொண்டு சென்றார்கள். பெரியவர்கள் சொல்லுவார்கள் ஒரு காதால் கேட்டு மறு காதால் விட்டு விடவேண்டுமென்று. ஆனால் என்னால் இதை வெளியில்விட முடியவில்லை. இந்தத் தலையங்கம் எனது தலைக்குள் அப் படியே தங்கிவிட்டது.

எனது தலைக்குள் சிந்தனை முளைகள் முளைக்கத்தொடங்கியது. எனது மனக்கண் முன் நாய்களும் எசமானர்களும் தோன்றி னார்கள். நாய்கள் ஒரு துண்டு எலும்பிற் காகவோ அல்லது ஒரு கட்டளைக்காகவோ எசமானர்களின் முகங்களை பார்ப்பது என் நினைவுக்கு வந்தது. இது தான் தங்கி வாழ்தல் நிலையென எனக்கு மனம் சொல்லியது.

எனது மனம் உலகின் அரசியல், பொருளாதார, வர்த்தக விடயங்களுக்குத் தாவியது. இந்தத் தங்கி வாழ்தல் நிலை நாய்களுக்கு மட்டுமல்ல. பல வறிய நாடுகளின் நிலையும் அதுதான்.

நாய்கள் தங்கி வாழலாம். மனிதர்கள் தங்கி வாழ வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? எனக்குள் கேள்விகள் எழுந்தன. நாம் உடனடியாக வல்லரசு நாடுகளை, அல்லது எமது குடியேற்ற நாடுகளை குற்றம் சாட்டி விட்டு சும்மாய் இருந்து விடுவோம். குற்றம் சாட்டி விட்டு தப்பித்துக் கொள்வதும் சும்மாயிருப்பதும் சுலபமானது. பிரித்தானியா வின் பிரித்தாளும் தந்திரத்தால் தான் தமிழர்களுக்கு இந்த நிலையென நாம் குற்றம் சாட்டுவது உண்டு. இந்த நேரத்தில் வாழ்ந்த தமிழ் அரசியல் வாதிகளுக்கு மின்சாரம் திடீரென நிற்பது போல் அறிவும், தொலை நோக்கு பார்வையும் அப்படியே நின்றுவிட்டதா? பாகிஸ்தான் திரு. ஜின்னா அவர்களைப்போல் தொலை நோக்கு பார்வையோடு சிந்தித்து, செயற்பட்டிருக்கலாம் இல்லையா? தமிழர் களின் தங்கி வாழ்தல் நிலை நீடிக்கிறது. நாம் பிரித்தானியவின் முகத்தைப் பார்த்துக் கொண் டிருக்கிறோம். இது தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு.

இன்னைறய இலங்கையின் பொருளாதார நிலையையும் கேள்விக்குள்ளாக்கி பதில்களை தேட முயல்வோம். போர்த்துக்கேயர், ஒல்லா ந்தர், ஆங்கிலேயர் எல்லாம் எமது வளங்களை ச் சுரண்டிக் கொண்டு சென்றதால்தான் இலங்கையால் வளார்ச்சியடைந்த பொருளா தார நிலையை எட்ட முடியவில்லையென நாம் குற்றம் சாட்டுவதுண்டு. இலங்கை சுதந்திர மடைந்து ஐம்பது வருடங்கள் கடந்து விட்டது. இன்னும் எத்தனை காலம் குற்றம் சாட்ட போகின்றோம்?

நாம் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவர்களின் பொருளா தார வளர்ச்சியை, தொழில் நுட்ப வளர்ச்சியை, தேடல்களை கண்கூடாகப் பார்க்கின்றோம். விஞ்ஞானம் வளராத காலத்தில் விறகுகளை

மூட்டி நித்திரை கொண்ட காலத்தையும், நம் முன்னோர்கள் மணற் தரையில் நித்திரை கொண்ட காலத்தையும் மனக்கண் முன் நிறுத்தி சிந்தித்துப் பார்த்தால் பல உண்மைகள் புரியும். விஞ்ஞானம் வளர்ந்த காலத்திலேயே நாம் குளிர்காலத்தில் படும் பாடுகளை நினைத்துப் பாருங்கள். அந்தக்காலத்தில் குளிரோடு எப்படிப் போராடியிருப்பார்கள். வாழமுடியாத காலநிலைதான் தேடல்களையும் உழைப்பாற்றலையும் நுண் அறிவுத்திறன்களையும் ஐரோப்பியர்களுக்கு கொடுத்தது. கப்பல்களைக் கட்டினார்கள். பிறந்த நாட்டிலேயே வாழ்ந்து இறந்து விடாமல் நாடுகளைத் தேடிப்புறப்பட்டார்கள். நாடுகளைக் கண்டார்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டார்கள். இலங்கையைப் போன்ற இயற்கை வளம் உள்ள நாடுகளைக் கண்டவுடன் பொருள் தேடும் ஆசை கூடியது. குடியேற்ற நாடுகளாக்கினார்கள். மலைக் காடுகளை தேயிலைத் தோட்டங்களாக்கினார்கள். பொருளீட்டி வல்லரசானார்கள்.

பிரித்தானியா சுதந்திரத்தை வழங்கிச்சென்று ஐம்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. விட்டுச்சென்ற தேயிலைதோட்டங்களினால் கிடைக்கும் அந்நியசெலவாணியை இலங்கை அரசாங்கம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. விட்டுச் சென்ற நெடுச்சாலைகளை இலங்கை அரசாங்கம் பயன்படுத்துகிறது. ஆனால் இன்னும் தன்னிறைவை எட்டமுடியாத நாடாக இலங்கை இருப்பதற்குப் பிரித்தானியா மட்டும் காரணமாக இருக்க முடியுமா? தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை மதித்து இன நெருக்கடிக்குத் தீர்வு கண்டு இலங்கையை அபிவிருத்திப் பாதையில் வழிநடத்திச் செல்ல இலங்கைக்குத் தலைமை தாங்கும் அரசியல் வாதிகளால் முடியும். ஆனால் தேர்தல் வெற்றிகளும், பதவிகளும் நாட்டின் அபிவிருந்தியை விட தங்கள் குடும்பங்களின் அபிவிருத்தியே பிரதானமாக இருக்கின்றது. இதனாலேயே வாழ்க்கைச் செலவீனம், பணவீக்கம், நாட்டின் கடன் சுமை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. தொடர்ந்து தங்கி வாழும் நாடாகவே இலங்கை இருக்கின்றது. வளர்த்த நாய் முகத்தை பார்த்த மாதிரி எப்பொழுதும் வல்லரசு நாடுகளின் முகங்களைப் பார்த்துக்கொண்டு இலங்கை இருக்கின்றது.

தொலைந்து போன நாட்களை எண்ணி கவலைப்படாதே, தொலைவில் தெரிகின்ற சிறிய விளக்கினை நோக்கியபடி முன்னேறிச்செல். போகப்போகப் உன்பாதை முழுக்க வெளிச்சம் பரவும்

— ஜெயம் 92 -

ஆருயிர்த் தோழனாயிருந்தாலும் உன்னுடைய இயலாமையையோ ஏழமையையோ பற்றிப் பேசாதே! எவர் முன்னும் உன் தன்மதிப்பினை விட்டுவிடாதே! தாழ்வு மனப்பான்மையை நீக்கிவிடு!

— ஔவையார் —

நமக்குப் பாரமாக இருப்பவர்களை நாம் மன்னித்து விடலாம். நாம் பிறருக்கு பாரமாக இருப்பது மன்னிக்க முடியாத குற்றம்.

— பெர்னாட்ஷோ —

# என் நெஞ்சுக்குள் எரியும் தீ

ச. அகிலன்

குமரிக்கண்டத்தின் தென்மூலையின் சிறு தீவு நாடான ஈழத்தின் இன்றைய நிலையை எண்ணிப் பார்க்கின்றேன். என் மனம் குமுறுகின்றது. கரணியம் ஈழத்தில் தமிழர் படும் இடர்கள் தன் நாட்டிலே ஏதிலி, முள்வேலி திறந்தவெளிச் சிறையென இன்னல்கள் நிறைந்த வாழ்க்கை. ஏன் இவ்வாறான வாழ்க்கை? எனக்குள் எழும் கேள்வி. சிந்தித்துப் பார்த்தால் நாம் எங்கே! என்ன ஆனோம். என் நினைவலைகளில் தோன்றியவை கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த இனம் தமிழினம் இது எனக்கு மிகையாகப்பட்டது. இல்லை இது ஒன்றும் மிகையானதல்ல. கதிரவனில் ஓர் எரிநட்சத்திரம் மோதுண்டு அது துகள்களாக சிதறி கால ஓட்டத்தில் மண்டலங்களில் ஏற்பட்ட மாற்றங்களால் அத்துகள்கள் பல கோளங்களாக மாறியது. அவ்வாறு மாறிய ஒரு கோளம் தான் இவ்வுலகம். அந்த உலகம் கூட ஓர் எரிகுழம்பாகவே காட்சியளித்தது. கால நிலைகளாலும் பல்வேறு மாற்றங்களினாலும் அந்நிலை மாற்றம் பெற்று பூமியின் ஒரு பகுதி இறுகி கற்களாகவும் பாறைகளாகவும், மலைகளாகவும் உருப்பெற்று பின்னர் உயிர் இனங்கள் வாழக்ககூடிய ஓர் பகுதியாக மாற்றம் அடைந்தது. நீர்நிலைகள், கடல்கள், மரங்கள் எனத் தோற்றம் பெற்றன. அத்தோற்றத்தின் பின்னரும் பூமியின் ஒருபகுதி எரிகுழம்பாகவே அதாவது கதகதப்பாகவே காணப்பட்டது. மறுபகுதியில் உயிரினங்கள் தோன்றின. காலப் போக்கில் மனித இனமும் தோற்றம் அடைந்தது. முதல் தோன்றிய மனித இனத்திற்கு தேவை என்பது இருக்கவில்லை. எனவே அவன் தன் போக்கில் வாழ்ந்தான். பசி எடுக்கும் போது தனக்கு உணவைத் தேடி வாழ்ந்தான். அவ்வாறு வாழுங்காலத்தில் அவன் விலங்குகளைப் பார்த்து அது எழுப்பும் ஒலிகளை வைத்து தனக்கும் ஒரு விதமான ஒலிகளை உருவாக்கி தன் இனத்துடன் ஒலிகள் மூலம் தன்உணர்வுகளை வெளிப்படுத்தினான். காலப்போக்கில் அவனுக்கும் சில தேவைகள் வளரத் தொடங்கின. அத்தேவைகளைப் பூர்த்தி செய்ய அவன் தன் இனத்தோடு கூடிய நெருக்கத்தைப் பேணினான். அப்பேணல் மூலம் அவனுக்கு தன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஒலிகள், சைகைகள் தவிர்ந்து பேசும் ஆற்றலைக் கண்டு கொண்டான். அதன் பின்னர் தனக்கு ஒரு பேசும் மொழியினை உருவாக்கினான். முதன் முதலில் மனிதனால் பேசப்பட்ட மொழி என்ன? தொடர்ந்து பார்ப்போம்...

அன்பாகிய அக்கினியிலே எவ்வளவு கடினமான இருதயமும் இளகியே தீரும்.
அழகிய முகம் ஒருவரை வசீகரிக்கும். ஆனால் அன்பான பேச்சு ஒருவரை அடிமைப்படுத்தும்.
— காந்தியடிகள் —

# முகத்தார் எனும் மகத்தானகலைஞர்

வி. மோகனதாசன்

அமரர் 'ஈழத்தமிழ்விழி' 'முகத்தார்' எஸ்.யேசுற ட்ணம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது கலை யுலக வாழ்வனுபவங்களைத் தாங் கிய 'நானும் நீயும்' என்ற நூலும், அவரது தேர்ந்தெடுத்த பன்னிர ண்டு வானொலி நாடகங்களைப் பதிவு செய்த இறுவெட்டும் வெளியிட்டு வைக்கும் விழா சமீபத் தில் (18-12-11) அன்று பாரிசில் இடம் பெற்றது.



தனது உயிரோட்டமான நடிப்பாற்ற லினால் முகத்தார் எனும் பாத்திரத்தினூடே ஒரு கிராமிய விவசாயியை மக்கள் மனங்களில் ஆழமாகப் பதியச் செய்தவர். இலங்கை வானொலியில் 263 வாரங்களாக மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்ற 'முகத்தார் வீடு' எனும் நாடகத்தை வழங்கி வானொலி நாடக வரலாற்றில் புதிய சாதனையை நிகழ்த்தியவர். அள்ளிக்கொடுக்கின்ற அட்சய பாத்திரம்போல, எந்தப்பாத்திரத்திலும் இவரது நடிப்பாற்றல் பொங்கிவழியும். பாரதியின் மிடுக்கான மீசை போல் முகத்தாரின் முகத்துக்கு அழகான முறுக்கு மீசை! நடிப்பதற்கே பிறந்தவர் போல் ராஜகம்பீரத்தோற்றம்! அவரது நூலில் அவரே குறிப்பிட்டுள்ளது போல் 'கலைக்காகத்தான் பெற்றாள்' தன்னைத் தன் தாய் என்கின்றார்.

கலையுலகில் புகழை, பொருளை சம்பாதிப்பது கடினமான காரியம். ஆனால் போட்டியும் பொறாமையும் நிறைந்த கலையுலகில் எளிதான காரியம் எதிரிகளைச் சம்பாதிப்பது தான்! ஆனால் அதனை அவர் ஒரு போதும் செய்ததில்லை. அவர் எதிரிகளே இல்லாதவர் என்று தனது உருக்கமான உரையில் குறிப்பிட்டார் கலையார்வலர் சஞ்சி கையாசிரியர் 'ஓசை' மனோ. கலை வானில் நட்சத்திரங்களாய் ஜொலி த்து வெற்றிகளைக் குவிக்கும் கலைஞர்கள் கூட குடும்ப வாழ்வி ல் தோற்றுப்போவதும் உண்டு. ஆனால் இந்த இரண்டு குடும்பங் களையும் பப்பா என்றுமே மோத விட்டதும் இல்லை. அதுவேறு இதுவேறு என்று பிரித்துப் பார்த்த தும் இல்லை. இது எங்கள் பப்பாவிடம் இருந்த உயர்ந்த பண்பாகும் என அவரது இளைய புதல்வி ஜீவா மரியதாஸ் இவ்வாறு நூலில் பதிவு செய்திருக்கின்றார். ஆக கலைவாழ்வு குடும்பவாழ்வு இரண்டையும் சரியாகக் கையாண்ட சாதனையாளராகவும் முகத்தார் திகழ்கின்றார்.

விழாவில் பேசிய அனைவருமே வியந்து போற்றியது முகத்தாரின் எல்லோரையும் நேசி க்கின்ற அன்புள்ளத்தையும், அவரது உயர்ந்த பண்பையும் இது ஒருவரின் மறைவுக்கு பின் கூறப்படுகின்ற வெறும் சம்பிரதாய வார்த்தை அல்ல என்பதை அவரோடு பழகிய யாவருமே நன்கு அறிவர். புகழின் உச்சியை தொட்ட போதும் அதனை எட்டுவதற்கு காரணமாக இருந்தவர்களை மறக்காமல் தனது நூலில் குறிப்பிடுகின்றார். பன்முக ஆற்றல் கொண்ட புகழ்மிக்க கலைஞர் சில்லையூர் செல்வராச னைப்பற்றி பதிவு செய்கின்றபோது 'வாடைக் காற்று' திரைப்படத்தில் பொன்னுக்கிழவர் பாத்திரம் 'சில்லையூரான் எனக்குப் போட்ட

பிச்சை!' இவ்வாறு கூறி இருப்பது உண்மையில் அவரது உயர்ந்த பண்பையே வெளிப்படுத்துகின்றது.

இவ் விழாவில் இடம்பெற்ற இன்னொரு சிறப்பம்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த கலைஞருக்கான 'முகத்தார் விருது' வழங்கப்பட்டதாகும். இவ்வாண்டுக்கான விருதினை முகத்தார் வீடு நாடகத்தினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தயாரித்தவரும் ரி.ரி.என் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளருமான டேவிட் ராஜேந்திரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். அது பொருத்தமானதும் கூட!

நிறைவாக இன்னொன்றையும் கூறியே ஆக வேண்டும். முகத்தாரின் இறுதிக்காலப் பெரு விருப்பமாக இருந்தது தனது கலையுலக வாழ்வனுபவங்களைப் புத்தகவடிவில் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது. ஆனால் அது முடியாமல் போய்விட அவர் எழுதி வைத்த குறிப்புக்களையும், அவர் மரணப்படுக்கையில் இருந்த போது கூறிய தகவல்களையும் சேர்த்து ஒரு முழுமையான நூலாக உருவாக்கியிருக்கிறார்கள். இந்தப்பணியை செய்ய கடின உழைப்பை வழங்கிய கவிஞர் வண்ணை தெய்வம் அவர்களையும் முகத்தார் யேசுரட்ணம் அவர்களது குடும்பத்தினரையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

# இனிய தமிழ் மக்களே!

**நோர்வேயிலிருந்து மருத்துவர் மகப்பேறியல் மற்றும் மகளிர் நோய் அறுவைச் சிகிச்சை நிபுணர்**
**ஆரோக்கியராணி ஜெயவீரராஜா**

ஒரு சின்னச் செய்தி சொல்லாம் என்று நினைக்கிறேன். ரொம்ப பெரிய விசயமில்லை, என்ன வென்றால் கையால் கும்பிட்டு வணக்கம் சொல்லும் நாம் ஐரோப்பிய நாடுகளில் வந்து கையைக் கொடுப்பது அல்ல குலுக்குவது பற்றி. ஒரு புதிய மனிதனை காணும் போது நம்மை அறிமுகப்படுத்திக் கொள்வது கை குலுக்குவதின் மூலம் தான். நாம் சும்மா 'கலோ' என்று மட்டும் சொன்னால் நாம் தூரமாகத்தான் இருக்க விரும்புகிறோம். அல்லது கடைகளில், பேருந்தில் மற்றும் விமானநிலைய பணியாளர்களிடம் அப்படிச்சொல்லலாம். ஆனால் மருத்துவரிடமோ அல்லது அலுவலகத்தில் சக அலுவலர்களிடம் நாம் கை குலுக்கி அறிமுகப்படுத்திக் கொள்வது நல்லது. இதில் வெட்கப்படுவதாலோ அல்லது தயங்குவதாலோ நாம் பெறும் நன்மைகள் கொஞ்சம் குறையுமே தவிர கூடாது. அன்பர்களே கையுறையைக் கழட்டி விட்டு கை குலுக்குங்கள். பன்றிக் காய்ச்சல் வந்த போது ஐரோப்பியர்களே கை குலுக்கத் தயங்கினார்கள்தான். அது வேறு. எனக்குத் தெரிந்த சில ஆண்கள் பெண்களுக்கு நல்லாய்க் கை குலுக்குவார்கள். ஆனால் ஆண்களைக் கண்டால்...

கை குலுக்கக் கற்றுக் கொண்டீர்களா?

அடுத்த முறை...

# மலையகப் பார்வையில் நாட்டார் இலக்கியம்

திருமதி ஜனகா ஜெகநாதன்
(ஆசிரியம் பயிற்றுனர்)

கலை இலக்கிய வெளிப்பாட்டின் முதல்நிலை நாட்டார் பாடல்கள். தமிழ் இலக்கியங்களின் வாழ்வின் முதற்பொருள், கருப்பொருள் உரிப் பொருள் என மூன்று அலகுகள் உள்ளன. இவற்றின் முதற் தோற்றுவாயாக பண்டைய மக்களின் நாட்டார் பாடல் கற்றவர்களோ, மொழிப் பாண்டித்தியம் பெற்றவர்களோ ஏடெடு த்து எழுதவுமில்லை எழுத்துப்பாவனையும் இல் லை ஏன்? எதற்கு? என்று எண்ணிப் பாடவுமில்லை இயல்பான வாழ்வின் வேலை அலுப்பைப்போக்கவும், கூட்டுத்தொழிலில் ஒர் ஒத்திசைவைக் கொள்ளவும், இனிமையை சேர்க்கும் நோக்கில் வாய் வழியாக வந்தவை யை இசையாகக் கொண்டார்கள்?

நாட்டார் பாடல்கள் ஒர் இசைவான இசையை கொண்டிருப்பதால் எளிதில் மனப்பாடம் ஆக்க த்தக்கவை, எனவே காலம் காலமாக வாய் மொழியாக இன்றுவரை பாடப்பட்டு வருகி ன்றன. இப்பாடல்களின் வழியாக அவர்களின் வாழ்வு முறை பிரதிபலிக்கிறது. இவற்றைச் சிற்றூர் இலக்கியம், உழவர் இலக்கியம், எழுதாப்பாடல், வாய்மொழி இலக்கியம் எனப் பலவாறு கூறுவர். எனினும் இசையும் கருத்தும் மகிழ்வான அழகியல் வாழ்வையே தோற்றுவிக் கின்றன. யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், மட்டக்களப்பு போன்ற இடங்களின் பாடல் களின் கரு உழைக்கும் மக்களின் வாழ்விய லின் வறுமையையோ, அடிமைத்தனத் தையோ ஏழ்மையையோ சித்திரிக்கவில்லை. பறவை கள், விலங்குகள் நிலத்திணைகள் இவற்றுடன் இணைந்தே தம் வாழ்வின் இன்ப துன்ப ங்களை அவற்றின் ஊடாகவே உணர்ந்தனர். அவற்றிற்கு அழுத்தம் வேண்டி இசையை இசைவாக்கிக்கொண்டனர். இசை செவிக்கு இனிமையாகவும் எளிமையாகவும் உள்ளத்தின் உணர்நிலையோடு ஒத்து உருவாக்கியது.

மலைநாட்டுத்தமிழ் மக்களின் வாழ்வியல் மிக மிக வேறுபடானது இவர்களின் வாய்வழியாக வந்த நாட்டுப்புறப்பாடல்கள் அவர்களின் வாழ் வியலின் மிகச்சோகமான பகுதியை சில சித்தரிக்கின்றன. அப்பாடல்கள் கேட்போர் நெஞ்சங்களில் கழிவிரக்கத்தையே ஏற்படுத்து பவையாகும்

தென் இந்தியாவில் வாழ்ந்த தமிழ் இன மக்களே மலையகத்தில் வாழ்கின்றார்கள், இவர் தாம் வாழ்ந்த நாட்டைவிட்டு அயல் நாடான இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வர்கள். ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் மலைநாட்டில் தேயிலைச் செடி பயிரிடவும் இரப்பர் மரம் நாட்டவும் பல தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள். இலங்கை மக்கள் இவ் வேலைகள் செய்வதற்கு விருப்பமற்றவர்கள். அதோடு அவர்கள் தங்கள் சொந்த நிலத்தை யே உழுது பயிரிட்டு வாழப் பழகிக் கொண்ட வர்கள். எனவே ஆங்கிலேயரின் தேயிலைப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு இந்தியா வில் இருந்து வேலைக்கு ஆட்களைக் கொண்டு வரத்திட்டமிட்டு அம்மக்களைப் பல வழிகளில் ஆசை காட்டி அழைத்து வரப்பட் டார்கள். வளமாகவும், வசதியாகவும் வாழலாம், கண்டிச்சீமையில் கனவு வாழ்க்கை வாழலாம், செல்வம் கொட்டிக் கிடக்கின்றது. அள்ளிக் குவிக்கலாம் என்று பல ஆசைவார்த்தைகள்

கூறி அங்கிருந்து இங்கு கடல் மூலமாகக் கொண்டு வரப்பட்டார்கள். வந்த பின்தான் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார்கள். மலைப்பாறைகளைச் செப்பனிடவும் தேயிலைச் செடி நாட்டவும் நாட்டிய பயிரைப் பராமரிக்கவும் ஆடுகள் மாடுகள் போல் நடாத்தப்பட்டார்கள். நிரைக்குடிசைகளில் குளிரில், கொசுக்கடியில் வறுமையில் வற்றிவரண்டார்கள். கொத்தடிமை களாக வேலை வாங்கினார்கள். மீண்டும் தம் தாய் நாடு போகவும் வழியில்லை. இங்கு வாழவும் முடியவில்லை. தினம்தினம் செத்-துத்செத்தே வாழ்ந்தார்கள். ஆங்கிலேயர்களால் அழைத்து வரப்பட்டவர்கள் அடிமைகளாக வாழ்ந்தார்கள். உண்ண உணவில்லை, உற ங்க இடமில்லை கற்கக் கல்விக் கூடமில்லை. ஆண் பெண் பேதமின்றி அனைவரும் தேயி லைச்செடி நாட்டிச் செத்தவர்களோ தேயிலைக்குரமாகினர். புதைக்கச் சுடுகாடில் லை. புதைத்த குழியில் புது மரம் நாட்டினர். சொந்தமண்ணில், சொந்த வீட்டில் வாழ்ந்த மக்கள் சுடுகாட்டுக்கும் சொந்தமில்லாமல் மாண்டார்கள். எமது தொப்புள் கொடிஉறவுகள் எமது நாட்டிலே அனாதியாக அடிமைகளாக வாழ்ந்த துயர்தான் அவர்வாய் மொழியாக வந்துதித்தது.

தேயிலைத் தோட்டம் ரப்பர் தோட்டங்களில் துரைமார் எனப்படும் ஆங்கிலேயரைவிடக் கண் காணிமாரின் கொடுமைதான் அதிகம். ஓயாமல் உழைத்தாலும் கண்காணி மாடாய் வதைப் பான். அந்தக்கண்காணி யார்? ஆங்கிலம் தெரிந்த தமிழன் தன்னினம் தன்னினத்தை வாட்டி வதைத்த கொடுமை மலையகத்தமிழ் மக்களின் சாபக்கேடான வாழ்கையாகிப் போனது. தொப்புள் கொடி உறவுகள் என்று கூறிக்கொண்டே தொப்புள் அறுத்தது பெரும் கதை. தாங்கள் படும் பாட்டை ஓர் தொழிலாளி தானே இரங்கிப் பாடுகின்றான். கண்ணிலே நீர் வடியக் கதறுகிறான்.

ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனைத் தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயை நான் மறந்தேன்
பாதையிலே வீடிருக்கப்
பழனிச் சம்பா சோறிருக்க
எருமைத்தயிரிருக்க
ஏண்டி வந்தோம் கண்டிச்சீமை
எண்ணிக் குழி வெட்டி
இடுப் பொடிஞ்சு நிற்கையிலே
வெட்டு வெட்டு எங்குறானே
வேலையத்த கங்காணி
தோட்டம் பிரளியில்லை
தொரமேல் குத்தமில்லை
கங்காணி மாரால
கனபிரளி யாகுதையா
அட்டைக் கடியும்
அரிய வழி நடையும்
கட்டை இடறுதலும்
காணலாம் கண்டியில
ரப்பரு மரமானேன்
நாலு பக்க வாதுமானேன்
இங்கிலீசுக் காரனுக்கு
ஏறிப் போகக் காருமானேன்.

இப்பாடல் அவர்கள் தங்கள் நாட்டில் வீடு வாசல், தோட்டம், துரவு என்று வாழ்ந்தவர்கள். சம்பா அரிசிச் சோறும் எருமைத்தயிரும் உண்ட மக்கள் அட்டைக்கடியும் கட்டை இடறிவிழுந் தெழும்பி மரத்தோடு தானும் ஒர் மரமாகி கடைசி இங்கிலீசுக்காரன் வாகனத்தில் ஏறிப் போக முதுகைக் குனிந்து கொடுத்து ஏறிப்போக வாகனமானேன் என்கிறான்.

ஈழத்திலேயுள்ள மலையக மக்களின் வாழ் வியல் கொடுமையானது. ஆசையூட்டி அழைத் து வரப்பட்டவர்கள் இங்கே வெள்ளையரும் அ வர்களின் எடுபிடிகளான ஆங்கிலம் கற்ற யாழ் ப்பாணத்தமிழரும் அவர்களை விலங்குகளாக

நடத்தினர். யாரிடமும் சொல்லவோ, பேசவோ வழியற்று நாதியாய் கிடந்தார்கள். இவர்கள் தாங்கள் பட்ட துன்பத்தைப் பாடலாய் பாடிய தனால் இப்பாடல்கள் பிறந்தன. கங்காணி படுத்தும் பாட்டை பாடும் ஒரு தொழிலாளி

ஓடி நேர் பிடிச்சு
ஒரு கூடை கொழுந்தெடுக்க
பாவி கணக்குப் பிள்ளை
பத்து ராத்தல் போடுறானே!

பொழுதும் இறங்கிடிச்சி
பூ மரமும் சாய்ஞ்சிடிச்சி
இன்னமும் இரங்கலையோ
எசமானே உங்கமனம்

தேயிலைக் கொழுந்து ஓடியோடிப் பறித்துக் கூடை நிறையக் கொடுத்தால் கங்காணி குறைந்த எடைதான் போடுவான். பொழுது பட்டுப் போனாலும் வீட்டுக்குப் போக விடாமல் கண்காணி வேலை வாங்குவான். எசமானே இன்னும் உனக்கு இரக்கம் வரவில்லையா? என வெம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது. நாட்டுப்புறப்பாடல் என நாம் அழகாக எம்மூர்ப்பாடல் களைப்பாடும் போதும் ரசிக்கும் போதும் மலையகத்து மக்கள் நாட்டார் பாடல்கள் எம் நெஞ்சை வரட்டுகின்றன.

காலங்கள் மாறியது
காசுகள் மாறியது - எம்
கோலங்கள் மாறவில்லை - எம்
சோகங்களும் உமக்குக் கேட்கவில்லை
அரசுகள் மாறின சிரசுகளும் மாறின
அராஜகங்கள் மாறவில்லை
அல்லலும் தீரவில்லை
அடங்கிக் கிடந்தோம்
முடங்கிக் கிடந்தோம்
அல்லலுற்றோம் அவதியுற்றோம்
அடிமைத்தளை அவிண்டுவிடுமா?

எனக்கேட்கின்றார்கள்.

காட்டை அழித்துக் களனியாக்கி கல்லை உடைத்து பாதையிட்டு இரத்த வேர்வையில் மரத்தை நாட்டிசெல்வங்கொழிக்கும் தேயிலைத் தோட்டமாக்கி நாடெங்கும் எற்றுமதிச் செல்வமாக்கிய மனிதன், இன்னும் அடிமையாகி அட்டைக்கு இரத்தம் கொடுத்து மரவட்டையாய் வாழும் எம்மினத்தை ஒரு தடைவையாவது நினைவில் கொள்வோம். அவர் தினம் பாடும் நாட்டார் பாடல்கள் எம் காதுகளில் தேனாய் ஒலிக்க அவர்களது வாழ்வியல் மாற வேண்டும்.

அன்பு செய்பவர் பேருண்மைகளை உணர்ந்து உரைப்பவர். இவர்கள் அனைவரும் கவிவாணர்கள். உண்மைகளில் எல்லாம் தலைசிறந்த் உண்மை அன்பேயாகும்.

— பெய்லி —

அன்பு உண்டு இரக்கம் இல்லை என்று பாசாங்கு செய்ய முடியுமா? அன்பும், இரக்கமும் இரட்டைக்குழந்தைகள்.

— ட்ரைடன் —

உலகத்தில் மக்களிடம் அன்பு கொள்பவனே உண்மையில் வாழ்பவன்.

— அந்தோனி —

# அமசடக்கு நாடுகள்

**தமிழ்த்தம்பி**

உலகம் சுற்றும் மூதாட்டி ஒருவரை நான் அடிக்கடி சந்தித்து கதைப்பதுண்டு. எழுபது வயதென சொன்னதாக எனக்கு நினைவில் இருக்கின்றது.

'பனைமரமே பனைமரமே ஏன் வளர்ந்தாய் பனைமரமே' என்ற பாட்டை அடிக்கடி பாடுவார். அந்தநாள் ஞாபகம் நெஞ்கிலே வந்தால் பழங்கதைகள் எல்லாம் சொல்லுவார். அன்று நான் மூதாட்டியை சந்தித்தபோது புங்குடுதீவில் சீனாக்காரன் துணி கொண்டு வந்து விற்றதை சொன்னார். எத்தனையாம் ஆண்டென்று கேட்டேன் நினைவு கொஞ்சம் தடுமாறுகின்றது. சீனாக்காரன் என்று சொன்னவுடன் எனக்கு சீன வெடிதான் நினைவுக்கு வந்தது. தைபொங்கல் என்றவுடன் எங்களுக்கு சின்ன வயதில் சீனவெடிதான் நினைவுக்கு வரும். ஆனால் சீனவெடி கொழுத்தும் போது இது சீனாக்காரர்கள் தான் கண்டு பிடித்தது என்பது எனக்குத் தெரியாது.

துணியில் தொடங்கி வெடியில் பிரமித்து ஆயுதத்தில் வந்து நிற்கின்றது இலங்கைக்கும் சீனாவுக்குமான உறவு. இன்று இலங்கையின் மனித உரிமை மீறல்களைப்பற்றி பற்றி ஏதாவதொரு நாடு குற்றம் சாட்டினால் போதும். சீனாவிற்கு முகம் சிவந்து விடும். அப்படியொரு அன்னியோன்னியமான உறவு. ஆனால் இந்த உறவுபற்றிக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால் தான் சில உண்மைகள் எங்களுக்குப் புரியும்.

சீனா உலகிலேயே சனத்தொகை கூடிய நாடென்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். பெருத்த குடும்பமென்றால் என்ன செய்வது? வாழ்க்கைக்காகப் போராடத்தான் வேணும். சீனா பல போராட்டங்களை மாவோசேதுங் தலைமையிலான பாதையாத்திரைகளை கண்ட நாடென்பதும் எங்களுக்குத் தெரியும். காலில் போட்ட செருப்பை தண்ணீரில் கொதிக்க வைத்துக் குடித்து பசியைப்போகியதும் உண்மைதான். பசி பட்டினி தாங்க முடியாமல்தான் பாம்பு, பூச்சிகளை, எல்லாம் உண்ணப் பழகினார்கள் என்பதும் மனம் கொண்டு பார்க்க வேண்டிய விடையம்தான்.

இதெல்லாம் பழைய கதை. நாம் புதுக்கதைக்கு வருவோம். இப்பொழுது இலங்கை அரசியல் கதைக்கும் போது இந்தியாவோடு சீனாவின் பெயரும் சரிசமனாக வந்து விழுகின்றது. முன்பு இந்தியவின் பெயர் சரிசமனாக வந்து விழும்.

சீனாவிற்கு அடுத்த படியாக இந்தியாவும் சனத்தொகை கூடிய நாடுதான். இந்த இரு நாடுகளும் தமது நாடுகளின் சனத்தொகைக் கேற்ப வேலை வாய்ப்புக்களை பெருக்க வேண்டியுள்ளது. உணவுத் தேவைகளுக் கேற்ப உற்பத்திகளைப் பெருக்க வேண்டியுள்ளது. பொருளாதார முன்னேற்றத்தை எட்ட வர்த்தகத்தைப் பெருக்க வேண்டியுள்ளது. வர்த்தகத்தைப் பெருக்க கடற் பிராந்தியங்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டியதாயிருக்கின்றது. இவை கூட வாழ்க்கைத்தேவைக்கான நியாயமான ஆசையென்று சொல்லாம். ஆனால் இந்த இரு நாடுகளுக்கும் வல்லரசு ஆசை கூட வந்து விட்டது. யார் வாழ்ந்தாலென்ன? வாழாமல் விட்டால் என்ன? என்ற அதர்மக் கொள்கையோடு கம்யூனிச முதலாளிகளும் ஜனநாயக முதலாளிகளும் புறப்பட்டு

விட்டார்கள்.

இந்த இரண்டுநாட்டு மக்களையும் நாங்கள் குற்றம் சாட்டுவது நியாயமாகாது. மனித நேயமுள்ளர்வர்கள் இந்த இரு நாடுகளிலும் நிட்சயமாக இருப்பார்கள்.

விசயத்திற்கு வருவோம். தமது பிராந்திய நலனுக்காக இலங்கை அரசாங்கத்தோடு சேர்ந்து எமது விடுதலைப் போராட்த்தை ஒடுக்குவதற்காக தமிழ்மக்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டதை முள்ளி வாய்க்கால் இறுதி யுத்தத்தில் கண் கொண்டு பார்க்க மனமின்றி பார்த்தோம்.

இந்த இரு நாடுகளும் அமசடக்காக இராணுவ, தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கியதை எமது வாழ்நாளில் நாம் மறந்து விடமுடியாது. உங்களது பிராந்திய நலனுக்காக தமிழ் மக்கள் தமது உரிமைகளை இழந்து வாழ்வாதா ரங்களை இழந்து சுயநிர்னைய உரிமையை விட்டுக்கொடுத்து வாழ வேண்டுமென்பது நியாய மான அரசியற்தர்மம் ஆகாது.

'அன்பு' வாங்குபவனுக்கும், பன்மடங்கு லாபத்தை உண்டாக்கக்கூடியது.
அன்பு நிறைந்த இடத்திலே திருப்தியும், அமைதியும் நிலவும்.

— பகவத்கீதை —

# கனவு காண்பதற்குரிய காரணங்கள்

**சதா சிறீகாந்தா**

ஞாபகத்தைத் தக்க வைக்கும் பகுதியாகிய கிப்போ கேம்பசிற்கும் காட்சி மையத்திற்கும் தொடர்புகள் உண்டு. தமது ஞாபக சக்தியின் உதவியோடு காட்சிகள் தூண்டப்படும் சமயத் தில் கண்களின் உதவியின்றிக் கனவுப் படங் கள் தோன்றுகின்றன. தூக்கத்தில் இருவகைப் பட்ட தூக்கங்கள் உள்ளன.

1.கண் அசையும் தூக்கம்
2.கண் அசையாத தூக்கம்

கண் அசையும் தூக்கத்தின் போது மூடிய இமைகளுக்குள் கண்மணி உருளும் நிலை யில் இருக்கும். நாள் ஒன்றிற்கு சுமாராக மூன்று தடவைகள் இத்தூக்கம் வருவதுண்டு. இந்த நிலையிலே தான் நாம் கோடீஸ் வரனாகும் நினைப்புகளும், கனவுக் கன்னிகள், திரையழகிகள் எல்லாம் எம்மோடு உல்லாச மாக இருப்பது போன்ற நிகழ்வுகள் தோன்று கின்றன. இக்கனவின் போது ஆண்கள் சில ருக்கு விந்து கழிதல் நிகழ்ச்சிகளும் நடைபெறு வதுண்டு. கண் அசையாத் தூக்கத்தில் இமை க்குள் கண் அசைவதில்லை. இந்த நிலையில் பயங்கரமான கனவுகள் தோன்றும். உதாரண மாக பேய்கள் நம்மைக்கொல்வது போன்றோ குரல்வளையை நசுக்குவது போன்றோ பயங்கர த் தன்மைகள் தோன்றும்.

# 'ரணங்கள்' நூல் வெளியீடு

வி. மோகனதாசன்

30-10-2011 தினத்தன்று பிரான்சில் அதிகம் குளிர் இல்லாத விதிவிலக்கான குளிர்கால நாளொன்றில் சில நூற்றுக்கணக் கான கலையார்வலர்கள் தமிழன் பர்கள் 'பன்யோலே' மண்டபத்தில் கூடியிருந்தனர்




'வலிகளை பகிர்ந்திட வாஞ்சை யுடன் அழைக்கின்றேன்' என்று கலைஞர் தயாநிதியின் 'ரணங்கள்' நூல் வெளியீட்டு அழைப்பிதழில் பார்த்துவிட்டு இன்றைய நாள் எமக்கு கண்ணீர் சிந்தும் நாளாக அமைந்துவிட நேரிடுமோ என்ற அச்சத்தோடு குறித்த நேரத்தைவிட சற்றுக் காலம் தாழ்த்தி மண்டபத்திற்குள் நுழைகின்ற போது ஏற்கனவே நிகழ்ச்சி தொடங்கியிருந்தது எமக்கு ஆச்சரியத்தைத் தந்தது. வரவேற்பு நடனம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இளநங் கையர் அபிநயத்தில் அவை கட்டுண்டு கிடந் தது. நிகழ்ச்சிகளைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கிக் கொண்டிந்த ஜஸ்ரின் கலைஞர் தயாநிதியின் சொந்த வாழ்வு, கலை வாழ்வு குறித்து அவரது நண்பர்களிடமும் கலையுலக வாழ்வில் அவரோடு கூடப் பயணித்தவர் களிடமும் சேகரித்த தகவல்களை தனது நண்பர் என்ற ரீதியிலும் உரிமைபாராட்டி சுவைபடக்கூறி அவையினை கலகலக்க வைத்தார். தயாநிதியை ஏற்கனவே அறிந்திரு-ந்தவர்களும் அறிந்திராத பல தகவல்களையும் அறியமுடிந்தது.

நிகழ்வின் தொடர்ச்சியாக அடுத்து ஓர் இசை க்கச்சேரி இடம் பெறும் என அறிவிக்கப்பட்டது. அரங்கில் புலத்தில் முகிழ்த்த இளையவர்கள் அமர்ந்திருந்தனர். ஏதோ பிள்ளைகள் தாங்கள் பழகியதை வழமைபோல செய்து காட்டப் போகிறார்கள் என்பதற்கு மேலாக வேறு எதிர்பார்ப்புக்களின் றிக் கவனித்துக் கொண்டிருந் தோம். இசைக்கச்சேரி தொடங்கி யது. தா தை என்று ஆடவா? என்று செல்வி. தேனுசா செல்ல த்துரை குரலிசைக்க, அவை தன் பேச்சிழந்தது. காதினில் வந்து தேன் பாய்ந்தது. கொஞ்ச நேரத் தில் தேர்ந்த இசைக்கலைஞர் களின் கச்சேரியைப்போல் களை கட்டத்தொடங்கியது. 'அலைபாயுதே கண்ணா' செல்வக்குமாரன் பிரசாந் வயலினில் மீட்ட அக்சனா திலீப்குமார் இணைந்து பாட செல்வக்குமாரன் வினோசாந் தண்ணுமை, கருணாகரன் சாரங்கன் கடம் என காணக் கண் கோடி வேண்டும்! நிறைவாய் 'வன்னி மயில்' என்ற பாடலை வயலினில் மீட்ட தண்ணுமை அதற்கேற்றவாறு இசைந்து துள்ளி விளையாட இறுதியில் வயலினும் தண்ணுமையும் போட்டி போட்டு இசைக்களத்தில் இறுதியுத்தம் புரிய அவையினரிடம் கேட்காமலேயே கரவொலியை அதிர்வேட்டாக மாற்றி வாழ்த்தி நின்றனர். 'வணக்கவொளியும்' அவர்களை மனதார வாழ்த்துகின்றது.

இனி புத்தக வெளியீட்டுக்கு வருகின்றோம். மருத்துவர், கவிஞர், சுவையாக பேசக்கூடியவர் (அளவாய் பேசுங்கோ இன்னும் நல்லாய் இருக்குமுங்கோ!) வி.ரி.இளங்கோவன் தலை மையேற்க நூல் குறித்துப் பேச விமர்சிக்க

அழகான கவிதாயினி லினோதினி நாடகக் கலைஞர், எழுத்தாளர் அரியநாயகம், கவிஞர் வண்ணைதெய்வம், இதழாசிரியர் 'ஓசை' மனோ, விமர்சகர் ஜோய் எனப் புடைசூழ நூல் வெளியீடு தொடங்கியது. 'ரணங்கள்' என்பது தமிழ்ச் சொல்லா? 'ர' என்ற எழுத்தை ஆரம்ப எழுத்தாகக்கொண்டு தமிழில் சொற்களை எழுதினால் அது இலக்கணப் பிழையாகாதா? முற்று முழுதாக தூய்மையான மொழியென்று ஒன்று உலகில் இல்லையென்று தொடங்கிய இலக்கியச் சர்ச்சை 'ரணகளமாகப்' போகாமல் போனது ஆறுதலான விடயம்!



நூல் குறித்துப் பேசியவர்களில் அனேகர் கவிதை நூலின் பாடு பொருளான ஈழ விடுதலைப்போராட்டம் தமிழர்களின் வாழ்வின் இரணங்கள் பற்றிப் பேசுவார்களென எதிர் பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே! தயாநிதியின் இளம்பிராயத்து காதல் அல்லது மோக அனுபவத்தை எடுத்தியம்புகின்ற கவிதை யொன்றை எடுத்து, அந்தக் 'காதல் கணங்களைச்' சுவைப்பதிலேயே காலத்தைக் கழித்தனர். பேச வந்தவர்களுக்கும் தங்கள் கடந்தகால காதல் அனுபவங்களை அந்தக் கவிதை கிளறி விட்டிருக்குமோ என்னவோ!

நிறைவாகப் பிள்ளைகளால் தங்களுக்குச் சுமையெனக் கருதி வயோதிபர் காப்பகங்களில் அநாதரவாக விடப்படுகின்ற பெற்றவர்களின் தனிமைத் துயரை கருவாகக்கொண்ட நாடகமொன்று மேடையேற்றப்பட்டது. தயாநிதியின் சகோதரரும் இலங்கை வானொலி புகழ் ஈழத்து மூத்த மண் வாசனைக் கலைஞருமான அப்புக்குட்டி ராஜகோபால் அவர்கள் தன் முதுமைக்காலத்தில் அந்தப் பாத்திரமாகவே மாறி பார்த்த எல்லோரையும் கண்கலங்க வைத்தார். நாடக முடிவில் அவையினர் எழுந்து நின்று கரவொலி எழுப்பி தங்கள் நெஞ்சம் நேசிக்கின்ற கலைஞனை மதிப்பளித்துப் பெருமைப் பட்டுக்கொண்டனர்.

'ரணங்கள்' நூலினூடாக கலைஞர் தயாநிதி ஒரு கவிஞராக முகிழ்ந்திருக்கிறாரா என்பதை இந் நூலை வாசித்துவிட்டு நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

## அயற்சொல் – தனித்தமிழ்

**சர்வேஸ்வரி சோமசுந்தரம்**

அக்கிரமம் - முறைகேடு, கொடுமை
அக்கினி - தீ,நெருப்பு, அழல், தழல், தணல்
அகதி - ஏதிலி
அகந்தை - செருக்கு
அகிம்சை - அருள்வழி
அகிலம் - உலகம், புடவி
அகோரம் - கடுங்கொடுமை
அங்கம் - உறுப்பு
அங்கீகரித்தல் - ஒப்பேற்றல்
அகாலமரணம் - அகாலச்சாவு, அகாலவிறப்பு
அநாதை - துணையிலி,ஏதிலி
அநாமதேயம் - பெயரற்றது
அதிசயம் - வியப்பு,புதுமை,சிறப்பு
அதிதி - விருந்தினன்

# வாத்தியாரும் கழுதையும்

பாரிசிலிருந்து அப்பையா

வாத்தியார்: என்ன கழுதையாரே கத்திக்கத்தி கழுத்து வீங்கிப் போச்சு போல இருக்கு?

கழுதையார்: கழுத்து வீங்கினது இருக்கட்டும்? கண்ட உடனே முதலிலை வணக்கத்தைச் சொல்லும் வாத்தியார். நீரே பிழைவிட்டால் உம் மட்டை படிக்கிற பிள்ளையள்?




வாத்தியார்: மன்னிச்சு கொள்ளும் கழுதையாரே, உம்முடைய கழுத்தைப் பார்த்தவுடன் வணக்கம் சொல்ல மறந்திட்டன். என்னை மன்னிப்புக் கேட்க வைச்சிட்டீர்.

கழுதையார்: பிறகும் பிழைவிடுறீர் வாத்தியார். மன்னிப்புக் கேட்கிறதாலை ஒண்டும் குறைஞ்சு போறதில்லை. அது உம்முடைய நல்ல குணத்தை, பெரும் தன்மையை உயர்த்திக் காட்டும்.

வாத்தியார்: கழுதையாரே இனி எண்டாலும் சொல்லும் கழுத்து ஏன் வீங்கிப்போயிருக்கு?

கழுதையார்: கழுத்து வீங்கினால்போலை என்ரை முதலாளி என்ன சம்பளத்தோடை லீவா தரப்போறார்? கழுதையாய் பிறந்தாத்தான் எங்கடை நிலமை உங்களுக்கு விளங்கும்.

வாத்தியார்: கழுதையார் உம்மை நான் கவலைப்படுத்திப் போட்டன் போல இருக்கு?

கழுதையார்: சரி விடும் வாத்தியாரே, உங்கிடை ஆட்கள் கத்திக் கதைக்கிறேல்லையோ? எங்களை மட்டும் சொல்லிப்போடுவியள் கழுதையை மாதிரிக் கத்தாதை எண்டு. உங்கிடை ஆக்கள் இரண்டு பேர் சேர்ந்தால் சரி பிரெஞ்சுகாரன் எழும்பிபோயிடுவான்.

வாத்தியார்: உண்மைதான் கழுதையாரே, எனக்கும் கைத்தொலைபேசிக்கு அழைப்பு வந்தால் என்னை மறந்து போய் கத்திக் கதைச்சிடுவன். மற்றவர்களுக்கு இடையூறு செய்யும் அளவுக்கு பொது இடங்களிலை கத்திக் கதைக்க கூடாதுதான்.

கழுதையார்: அது இருக்கட்டும் வாத்தியாரே அது ஏன் இப்ப உங்கடை ஆக்கள் கழுத்திலை கையை வைச்சோண்டு திரியினம்?

வாத்தியார்: கழுத்திலை கை வைக்காமல் வேறை எங்கை வைக்கிறது. கள்ளன் எல்லே நகையை பறிச்சோண்டு போடுவான்.

கழுதையார்: உங்களை நினைச்சால் சிரிக்கிறதா அழுறதா எண்டு தெரியேல்லை.

வாத்தியார்: எங்களை மாதிரி மனிசனாய் பிறந்திருந்தால் எங்கிடை நிலமை உங்களுக்கு விளங்கியிருக்கும். நாலு நகை போட்டாத்தான் எங்கிடை ஆக்கள் எங்களை மதிப்பினம்.

கழுதையார்: அது ஒரு காலத்திலை உங்கிடை நாட்டிலை அப்படி இருந்திருக்கும். இப்ப நாகரிகம் மாறிக்கொண்டு போகுது. பிரெஞ்சுக்காரன் ஒரு போதும் கையிலை கழுத்திலை போட்டிருக்கிற நகையை பார்க்கிறதில்லை.

நீங்கள் போட்டிருக்கிற உடுப்பைப் பாத்துத் தான் உங்களை மதிக்கிறான். கள்ளன் மட்டும் தான் உங்கிடை நகையை பார்ப்பான்.

வாத்தியார்: உண்மைதான் கழுதையாரே, இரவு பகலாய் அடிச்சு உழைச்சு கள்ளனிட்டை பறி கொடுக்கிறம். ஒரு நாள் இப்படித்தான் கழுதை யாரே ஒரு தமிழ் மனிசி ஒண்டிட்டை கால் தடம் போட்டு விழுத்திப் போட்டு கழுத்து சங்கி லியை அறுத்துக் கொண்டு போயிட்டாங்கள்.

கழுதையார்: வாத்தியார் காலநிலைக்கேற்ற மாதிரி, சூழ்நிலைக்கேற்ற மாதிரி வாழவேணும். இது குளிர் நாடு நல்ல யக்கெற்றை, சப்பாத்தை வேண்டி போடுங்கோ. நல்ல கட்டிலை வேண்டி நித்திரை கொண்டிட்டு போய் வேலை செய்யு ங்கோ. வேலை செய்து களைச்சால் விடுமுறை எடுத்துக்கொண்டு நாலு நல்ல நாடுகளை போய்ப்பாருங்கோ. உடம்புக்கும் நல்லம் உள்ள த்துக்கும் நல்லம்.

வாத்தியார்: உமக்குள்ள அறிவு கூட எனக் கில்லாமல் போச்சு கழுதையாரே நீர் புத்திசாலி

கழுதையார் வருவார்...

அணுகுண்டுகளுக்கு முன்பு ஒருவேளை மனிதன் அசையாமல் நிற்கவும்கூடும், ஆனால் கனிந்த சொற்களின் முன் அவன் பின்னடையத்தான் வேண்டும்.

— காண்டேகர் —




## முட்டைச் சாதம்

| | |
|---|---|
| பச்சையரிசி | - 1 கிலோ |
| முட்டை | - 10 |
| நெய்-டால்டா | - 3 மே.சை கரண்டி |
| மிளகு | - 25 |
| லவங்கம் | - 6 |
| உப்பு | - தேவையான அளவு |
| சிறிய வெங்காயம் அரிந்தது | - 100 கிராம் |
| கருவாப்பட்டை துண்டு | - 2 அங்குலம் |

செய்முறை: கருவாப்பாட்டை, லவங்கம், மிளகு இவற்றைச் சேர்த்து அலம்பிய அரிசியைப் பாத்திரத்தில் இட்டு வேக வைக்கவும். (முட்டை யைத் தயார் செய்யயும் போது சாதம் சூடாக இருக்க வேண்டும்.)

முட்டையின் வெண்கருவை தனியாக எடுத்து நன்றாக நுரைவரும் வரை முள்ளுக் கரண்டி யால் அடிக்கவும். நெய்யை வேறு ஒரு பாத்திர த்தில் இட்டு சூடுபண்ணவும். வெங்காயத்தை அதனுள் கொட்டி பொன்னிறம் ஆகும் வரை வேகவிடவும். ஒரளவு வேகியதும் அடித்த முட்டையை அதனுள் இட்டு ஒன்று இரண்டு நிமிடங்களுக்கு கருகாமல் கிளறவும். அதனுள் வேகிய சாதத்தை இட்டு நன்றாகக் கலந்து கிளறவும். சாதத்தைப் பரிமாறு முன்னர் கருவப்பாட்டைத் துண்டை நீக்கவும்.

சுவை மிகுந்த முட்டைச் சாதத்துடன் குருமா, குழம்பு, வறுவல் மற்றும் பச்சடி எதனைச் சேர்த்துப் பரிமாறினாலும் நன்றாக இருக்கும்.

# எரிகாயங்கள்

இலண்டனிலிருந்து திருமதி இராஜமனோகரன்
தோல்சத்திரசிகிச்சை நிபுணர்

தினசரி வாழ்க்கையில் எரிகாயங்கள் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாகும். முன்னேறி வரும் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியிருந்தாலும் தீ விபத்து களால் வரும் விளைவுகள் எமக்குக் கெடுதல் ஏற்படுத்தக் கூடியவை. எரிகாயங்கள் பொதுவா க வீடு வேலைத்தளங்களில் தற்செயலாக நடை பெறுகின்றன. அனேகமான தருணங்களில் இந்த விபத்துக்கள் தடுக்கமுடியாத காரணங் களால் உருவாகினாலும், சில வேளைகளில் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட விபத்தாக வோ, தற்கொலை முயற்சியாகவோ அமைந்து விடுகின்றன. எரிகாயங்கள் பொதுவாக, நெருப் பினால் ஏற்படும். மற்றைய காரணிகள் கொதி நீர், கொதி எண்ணெய், தார் மற்றும் சூடான பொ ருட்களும், மின்சாரமும் காரணமாக இருக்க லாம். அமிலங்களும் வேறு பல இரசாயனப் பொருட்களும் வேறு விதமான எரிகாயங்களை ஏற்படுத்தலாம்.

## முதல் உதவி

நெருப்பினால் ஏற்பட்ட எரிகாயங்களுக்கு முக்கியமாக நீரினால் நனைத்துப் பத்து நிமிடங்கள் வரை கழுவவேண்டும். குளிர்நீர் வெப்பத்தைக் குறைத்து தோலில் தீயால் ஏற்படும் விளைவைக் குறைக்கும். மிகவும் குளிர்ந்த நீர் குழந்தைகளின் உடல் வெப்ப த்தைச் சடுதியாகக் குறைக்க நேரிடும். எனவே சிறிய குழந்தைகளின் காயங்களை நீரில் கழு வும் போது இந்த விளைவைக் கருத்தில் கொள் ளவேண்டும். எண்ணெய், பற்பசை மற்றும் கைமருந்துகள் காயத்தில் போடுவதை தவிர்க்க வேண்டும். உடலில் உள்ள ஆடையை உடனடியாக அகற்ற வேண்டும், ஆனால் துணி காயத்தில் ஆழமாக ஒட்டி இருந்தால் அதைக் கடினமாக இழுத்து எடுக்கக் கூடாது.

எரிகாயங்களுக்கான காரணியை உடனடியாக நீக்கவேண்டும். தீயை அணைப்பதும் மின்சார த்தை தடைசெய்வதும் மிகவும் முக்கியமான வை ஆகும். முதல் உதவி செய்பவன் தன்னு டைய பாதுகாப்பையும் கருதவேண்டும். உதார ணமாக மின்சாரத்தில் இருந்து நோயாளியை அகற்றும் போது தனக்கு மின்சாரம் பாயாமல் கவனமாக இருக்க வேண்டும். மின்சார எரி காயங்கங்களுக்கு உட்பட்டவருக்கு இருதயம் பாதிக்கப்படலாம். இதனால் மாரடைப்பு மற்றும் உடனடி மரணம் சம்பவிக்கலாம். இந்த நிலை மைகளில் முதல் உதவி செய்பவர் உடனடி யாக செயற்கைமுறை வாய் வைத்து சுவாசமும், இதய அமுத்தமும் கொடுத்து பாதிக்கபட்ட நபரை மீள வைக்க முடியும். எரிகாயங்களை துப்பரவான துணியால் மூடி உடனடியாக நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவேண்டும்.

உடலில் எற்படும் எரியகாயங்களை வீதக் கணக்கில் அளந்து அதற்கு தகுந்த படி சிகிச்சை வழங்கப்படுகின்றது. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட விதமான எரிகாயங்கள் ஆபத்தானவை. கூடிய கவனமும் அதி தீவிர சிகிச்சையும் தேவைப்படும். குழந்தைகளும், முதியோரும் குறைந்த விதமான எரிகாயங்க ளாலேயே அதிகளவு பாதிப்பை அடையவும்

கூடும். எரிகாயங்கள் பொதுவாக மிகவும் நுட்பமான முறையில் பராமரிக்கப்படுகின்றன. அடிக்கடி தேவைக்கேற்றபடி இந்த மருத்துவ முறை மாற்றப்படும். அத்துடன் நோயாளியின் எதிர்ப்புசக்தி குறைந்து இருப்பதால் கூடிய சத்து உணவுகள் புரதம் மற்றும் விற்றமின்கள் அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்ளப் படுகின்றன. மிகவும் ஆழமான காயங்கள் சத்திரசிகிச்சை மூலம் நீக்கப்பட்டு புதிய தோல் பாதிக்கப்படாத உடற்பாகங்களில் இருந்து எடுத்து இந்த காயங்களில் வைக்கப்படும். இதனால் பாதிக்கப்பட்ட உடற்பகுதி துரிதமாக்க் குணமடையச் சாத்தியம் உண்டு. நவீன முறையில் செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட தோல், மற்றும் இறந்த உடலில் இருந்து நீக்கப் பட்டு பக்குவமாக பதப்படுத்திய தோல் மிகப் பெரிய எரிகாயங்களை குணப்படுத்த உதவும். கூடுதலான எரிகாயங்களுக்கு உள்ளானவர்கள் அதிதீவிர சிகிச்சை நிலையங்களில் பாரமரிக்கப்படுகிறார்கள். எரிகாயங்களுக்கு உள்ளான நோயாளி விரைவில் கிருமித் தொற்றுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் உண்டு. இதனால் நோயாளியைப் பராமரிக்கும் போது மிகுந்த சுத்தமான நடைமுறைகளை கையாளவேண்டும். பாதிக்கப்பட்ட பகுதியை துப்பரவாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் காய்ச்சல், கூடுதலான நோ, சிதல் வடிதல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக வைத்திய உதவியை நாடவேண்டும். ஏற்புவலிக்கு எதிரான ஊசிமருந்து ஏற்றிக்கொள்ளல் அவசியம்.

### பின் விளைவுகள்

எரிகாயங்கள் மாறினாலும் பின்விளைவுகள் மிகவும் அதிகமானவை. இவை நோயாளிக்கு மிகுந்த உடல் மற்றும் மனப்பாதிப்பை ஏற்படுத்துகின்றன. காயம் பட்ட இடங்கள் தடித்து மிகவும் கடினமாக இருக்கும். இவை பொதுவாக நோ, கடி மற்றும் மூட்டுகளில் பிடிப்புகள் ஏற்படுத்தலாம். முகத்தில் ஏற்படும் வடுக்கள் பல விதமாக பாதிப்புகளை ஏற்படுத்தும். கண்கள், வாய் மற்றும் கழுத்து போன்ற உடற் பகுதிகள் பாதிக்கப்பட்டால் மிகவும் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

எரிகாயங்களுக்கான சிகிச்சை புண்மாறியவுடன் நிற்பதில்லை. மாறாக இது பல வருடங்களுக்கு தொடரும் சிகிச்சையாக மாறும். பெருகிவரும் வடுக்களைத் தவிர்க்க அழுத்த உடைகள் பாவிக்கப்படுகின்றன. அத்துடன் தொடர்ச்சியான பயிற்சிகள் மூட்டுகளை நேர்நிலையில் வைத்திருக்க உதவிசெய்யும். சிலவேளைகளில் இந்த வடுக்களை நீக்க நுட்பமான சத்திர சிகிச்சை தேவைப்படலாம்.

எரிகாயங்கள் நோயாளிக்கு பருத்த உடல் மற்றும் மனப்பாதிப்புகளை ஏற்படுத்தும். அனேகமான சந்தர்ப்பங்களில் இவை நடைபெறாமல் தடுப்பு முறைகளையும், பாதுகாப்பு முறைகளையும் கையாள்வது அவசியம். வீடுகளில் நெருப்பு மற்றும் மின்சார உபகரணங்கள், கொதி நீர் பாவனைகளில் கவனமாக இருப்பது முக்கியம். குழந்தைகள், முதியோர் மற்றும் மனநிலை பாதிப்படைந்தவர்கள், காக்காய்வலிப்பால் பாதிக்கப்பட்டவர்கள் எரிகாயங்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் கூடுதலாக உள்ளன. எனவே இவற்றை கருத்தில் கொண்டு நாம் எம்மை பாதுகாப்பதுடன் மற்றவர்களுக்கு இப்படியான விபத்துகள் நடைபெறாமல் பார்த்து கொள்வது எமது கடமையாகும்.



நம்ம ஊரு நல்ல ஊரு

# உருத்திரபுரம் - இலங்கையில் ஒரு தஞ்சாவூர்

கா.நாகலிங்கம்

நாற்றிசையும், கடலாற் சூழப்பட்ட இலங்கைத் தீவில் ஈழம் என அழைக்கப்படும் தமிழரின் பாரம்பரிய தாயத்தின் வடபால் அமைந்த யாழ்ப் பாண மாவட்டத்திற்கும், வவுனியா மாவட்டத் திற்கும் இடையே அமைந்துள்ளது கிளிநொச்சி மாவட்டம். இயற்கையன்னை உவந்தளித்த நீர் வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்றது இம்மாவட்டம். இலங்கையின் பாரிய குளங்களில் ஒன்றாக இரணைமடுக்குளம் இங்கு அமைந்துள்ளதானது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக் குளத்தின் மூலம் பல்லா யிரக்கணக்கான ஏக்கர் நிலம் பயிர்ச்செய்கை க்கு உட்படுத்தபட்டு வருகின்றது.

இந்தியாவின் தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சி யமாகத் திகழ்வது போல இலங்கையின் கிளிநொச்சி மாவட்டம் வட இலங்கை மக்களுக்குச் சோறிடும் நெற்களஞ்சியமாகவும் வளம் செழிக்கும் பிரதேசமாகவும் திகழ்கின்றது.

### பழமைவாய்ந்த சிவாலயம் கொண்ட பதி

முப்பதுகளில் இங்கு ஆரம்பித்த குடியேற்றங் களுக்கு முன் வரலாற்றுக்கு முந்திய காலத்தில் இருந்து கரைச்சி பிரிவின் சில பகுதிகளில் குறிப்பாக உருத்திரபுரம் மிகவும் நாகரிகம் வாய்ந்த மிகப்பழைய மனித வதிவிடமாகத் திகழ்ந்திருக்கின்றது. இங்குள்ள சிவாலயத்திற் காணப்படும் சதுரவடிவான ஆவுடையார் கல், சோழப் பெருமன்னர் காலத்துக்கு முற்பட்டது என்பதை நிரூபிக்கின்றது. இவ் ஆவுடையார் கற்சதுர வடிவமாகவும், பிரம்மா, விவுணு, உருத்திரன் என்னும் மூன்று பாகங்களாகவும் அமைந்துள்ளது. இப்படியான சதுர ஆவுடை யார் இராசராசேசுவரன் காலத்துக்கு முன்பு தான் சிவாலயங்களில் வைத்து வழிபட்டு வந்து ள்ளது எனவும், பின்னைய காலங்களில் வட்ட வடிவ ஆவுடையாரே பிரதிட்டை செய்யப்பட்டு வந்ததாகவும், ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இத்தனை பழமை வாய்ந்த சிவாலயம் அமை ந்துள்ள நாடே எமது பிறந்த பதியாம் உருத்திர புரம் ஆகும். இம்முது பெரும் நாடு போரினா லும், மலேரியா நோயினாலும் காலத்துக் காலம் சோபையிழந்து காணப்பட்டது.

### விவசாயம் முக்கியம் தொழில்

இரணைமடுக் குளத்தின் இரண்டாம் குடியே ற்றத் திட்டமான உருத்திரபுரம் 1949-ல் ஆரம்ப மானது. இதன் காரணமாக அன்று முதல் வளர்ச்சிடையத்தொடங்கியது. இன்று சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இங்கு வாழ் கின்றனர். இக்கிராமத்தின் அருகே சிவநகர், புதுமுறிப்பு, நீவில், இரத்தினபுரம், ஆனந்தபுரம், சக்திபுரம் போன்ற சிறு கிராமங்களும் அமைந்து ள்ளன. இங்குள்ளோரில் அநேகர் விவசாய த்தையே செய்கின்றனர். மட்டமான தரையும், இருவாட்டி மண்ணும் விவாசாயத்திற்கு தேவையான நீர் இரணைமடுக்குளம், புதுமுறி ப்புக்குளம், சிவன் கோயில்குளம் ஆகியவற்றில் இருந்து கிடைக்கின்றமையாலும் வருடத்தில் இருமுறை பயிர் விளைவிக்கக் கூடிய வாய்ப்பு க்கள் உண்டு. விளைவிக்கப்படும் நெல்லி னைச் சந்தைப்படுத்துவதற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுகின்றன.

அத்துடன் தனியார் வியாபாரிகளும் அரிசி ஆலை உரிமையாளர்களும் நெல் கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டுகின்றனர்.

உப உணவுப் பயிர்களான எள்ளு, கச்சான் என்பனவும், பணப்பயிரான புகையிலையும், செய்கை பண்ணப்படுகின்றன. இவற்றை விற்ப தற்கு உள்ளூரில் இருக்கும் சந்தைகளும் கிளி நொச்சி மத்தியில் உள்ள பெரிய சந்தையும் உதவுகின்றன. பெரும்பாலானவர்கள் தென் னைச் செய்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

## படித்தவர்கள் நிறைந்த பதி

ஐந்து சத வீதமானோர் கால்நடை வளர்க் கின்றனர். இவற்றிலிருந்து பெறப்படும் பால் உள்ளூர் மக்களுக்கும், பாற்பொருட் கூட்டுறவுச் சங்கத்துக்கும் விற்பனை செய்வதுடன் தயிர், நெய் போன்ற உற்பத்திக்கும் உபயோகின்றனர். இத்துடன் குடிசைத் தொழிலாகக் கோழி வளர்த்தல், பன்புற்பாய் இழைத்தல், பனையோ லைப் பொருட்கள் இழைத்தல் என்பன நடை பெறுகின்றன. ஐந்து சத வீதமானோர் அரசு ஊழியர்களாகவும் உள்ளனர்.

தொன்னூற்றொன்பது சதவீதமானவர்கள் படி ப்பறிவுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். விஞ்ஞான, விவசாய கூடங்களமைந்த மகாவித் தியாலயம் ஒன்றும், மூன்று வித்தியாலங்களும் இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவு கின்றன.

இங்கு வாழும் மக்களிற் 90 பங்கினர் சைவ மதத்தவர்களும், பத்து வீதத்தினர் கிறித்தவ மக்களாகவும் வாழ்ந்தாலும் மத வேறுபாடுகளி ன்றி அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்ற னர். பழமைமிக்க ஒரு சிவாலயமும், மூன்று பெரிய விநாயகர் ஆலயங்களும், ஒரு முருகன் ஆலயமும் பல சிறு ஆலயங்களும் இரு கிறித்தவ ஆலயங்களும் அமைந்துள்ளன.

கிறித்தவ மதத்தினரால் நடத்தப்படும் இரு அனாதை மாணவ விடுதிகளும், காந்தீயம், குருகுலம் போன்ற அனாதரவற்ற சிறுவர், பெரியோர் விடுதிகளும் உண்டு. அத்துடன் சமயப்பணிபுரியும் கிறித்தவ மிசனரியினரும் மகாதேவ ஆச்சிரமம் போன்ற சைவ அற நிலையங்களும் உண்டு. சிறிய வைத்தியசா லை ஒன்றும், அதனோடு இணைந்த மகப் பேற்று வைத்திய நிலையங்களும் உள்ளன.

மூன்று நூல் நிலையங்களும், மூன்று விளை யாட்டு கழகங்களும் இக்கிராமத்தில் அமைந்து ள்ளன. கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிசிற ந்த விளையாட்டுக்கழகம் உருத்திரபுரத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சமத்துவம் என்பது என்ன? சட்டங்களை உடைத்தெறிவது சமத்துவம் ஆகாது. சட்டங்களைத் தவிர வேறெவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் இருப்பதே சமத்துவம்!

அறிவு யாவருக்கும் சொந்தமானது. அறிவும் ஆண்டவனும் ஒன்றுக்கொன்று விரோதமுள்ளவை யல்ல!

# சிறுவர் வளர்ப்பில் சிறப்பான வழிமுறைகள்

நகுலா சிவநாதன்

அன்னிய நாடுகளில் உள்ள சிறுவர்களுக்கு எமது அன்னைமொழியை ஊட்டுவோமா?

நாம் வாழும் இந்தப் பாரிய உலகில். ஒரு மனிதனை அதன் இனத்தோடு தொடர்புபடுத்த உதவுது மொழி ஒன்றேயாகும். இந்த மொழி இனங்களுக்கிடையே வேறுபாடுடையதாக உள்ளது இன்று எத்தனையோ மொழிகள் உலக அரங்கில் உள்ளன.

இருந்தாலும் நாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனியமொழி வேறொன்றில்லை. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ் எங்கள் அன்னை மொழியாகிய தமிழ். இன்று புலம்பெயர் நாடுகளில் புகலிடத்திற்காக தமிழன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். புகலிடத்தில் உள்ள அன்னிய மொழிகளைக் கற்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றான். இருந்தாலும் தாய்மொழி ஆகிய தமிழையும் நாம் முயன்று நமது சிறுவர்களுக்குக் கட்டாயம் ஊட்டவேண்டும்.

ஒரு பிள்ளைக்கு தாய்பால் எவ்வளவு முக்கியமோ, அது போல் தாய்மொழியும் முக்கியமானது. தாய்மொழியில் ஒரு பிள்ளைக்கு அறிவு இருந்தால் அது எத்தனைமொழி கற்றாலும் அதிலே வெற்றியைக் காணமுடியும். அன்னை மொழி புரிந்தால் பலமொழிகளை மொழிபெயர்ப்பு செய்யவும் உதவியாக இருக்கும்.

தாய்மொழியில் அறிவில்லாதவன் எந்த மொழியைக் கற்றாலும் அதில் பாண்டித்தியம் பெற முடியாது என பேனாட்சோ அன்றே கூறி வைத்தார்.

இப்படிப் பெருமை வாய்ந்த எம்மொழியைக் கற்க சில பெற்றோர்கள் பின்னிற்கிறார்கள். ஏனென்று கேட்டால் புகலிட மொழியை குழந்தை கற்றுக்கொள்ளாது என்கிறார்கள். சிறு வயது முதற்கொண்டே எமது பிள்ளைக்கு எமது மொழியை பண்பாட்டை விளக்கி, தமிழ்மொழியைக் கற்றுக்கொடுத்தால் பிள்ளை அந்த வேறுபாடுகளையும் விளங்கி எமது மொழியையும் இலகுவாக கற்கும். பிற மொழியில் உள்ள நல்ல விசயங்களையும் எமது மொழிக்குக் கொண்டு வர எமது தமிழ் அறிவும் பயன்படும்.

தாய்மொழியான தமிழிலே பல தத்துவக் கருத்துகளும் உயர் கருத்துகளும் இருப்பதாக எண்ணி எத்தனையோ மேல் நாட்டு அறிஞர்கள் எமது மொழியை இலகுவாகக் கற்றார்கள். உதாரணமாக இத்தாலி நாட்டைச் சேர்ந்த கொன்சைன் டைன் பெஸ்கி என்பவர் தேம்பவாணி, வேத விளக்கம் போன்ற நூல்களை எழுதினார். தமிழில் இலக்கண நூல்களையும் வெளியிட்ட அன்னியரும் இவரே. வேற்று நாட்டவர்களே, எமது மொழியைக் கற்க வரும்போது, இங்கிருக்கும் எம் சிறார்கள் கற்காமல் விடலாமா?

'தமிழுக்கு அமுது என்று பெயர் -அந்தத்
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

என்று புரட்சிபாவலர் பாரதிதாசன் கூறியதுபோல, எமது தாய் மொழியாகிய தமிழை உயிரெனக் காப்போமாக. எனவே சிறுவர்கள் எத்தனை மொழிகளைக் கற்றாலும் அத்தனை மொழிகளுடன் எமது அன்னை மொழியாகிய தாய் மொழியையும் கற்று தமிழீழத்திற்கும் எமது இனத்துக்கும் தமிழருக்கும் பெருமை சேர்ப்போமாக!

# பொய்யாமொழி என்றும் பொய்யா மொழியே

இரா.இரத்தினகுமார்

இன்றைக்கு ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் வள்ளுவப்பெருந்தமைகயால் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு கிடைத்த கொடை திருக் குறள்.

இது பொதுமறை, வாயுறைவாழ்த்து, பொய்யா மொழி எனப்பலவாறாகப் போற்றப்படுகின்றது. பொய்யாமொழி எனும் தலைப்பின்கீழ் கீழ்வரும் குறளைச்சுவைப்போம்.

'உள்ளக்களித்தலும் கானமகிழ்தலும்
கள்ளுக்கில்லை காமத்திற்குண்டு'

கள்ளு - மது
காமம் - விருப்பம், காதல், பாலுணர்வு

கள்ளுக்கில்லை அதாவது மதுவிற்கில்லை. என்ன இல்லை? மதுவை அருந்தினால் மட் டுமே போதைதரும். மதுவைப் பார்த்தாலோ, அன்றி பிறர் மது அருந்துவதைப் பார்த்தாலோ, மது அருந்தும் காணொளிகளைப் பார்த்தாலோ எவ்வித சலனமோ போதையோ ஏற்படுவது போன்ற உணர்வே ஏற்படுவதில்லை. ஆனால் உள்ளக்களித்தலும் காண மகிழ்தலும் காமத் திற்குண்டு. அதாவது காமம் உள்ளத்தில் நினைத்தாலே ஒரு கிளுகிளுப்பைத் தரும். பார்த்தாலோ பார்க்கத் தூண்டும். புலப்பெயர் வாழ்வில் எமது சந்ததியினரை நம் கலாசார விழுமியங்களுக்கூடாக வளர்த்தெடுப்பதில் நாம் எதிர்கொள்ளும் அன்றாடப்பிரச்சினைகளுள் ஒன்று தொலைக்காட்சி விளம்பரங்கள் மற்றும் ஏனைய விளம்பரங்கள் கூட யாராவது மது குடிப்பது போன்ற காட்சியை விளம்பர யுக்தி யாக கையாள்கின்றனரா? இல்லையே ஏன்? காணமகிழ்தல் கள்ளுக்கில்லை மங்கையரின் மேனியழகை படம்பிடித்து காட்டுவதை விளம் பர யுக்தியாக கையாளுகின்றனரே ஏன்? காண மகிழ்தல் காமத்திற்கிருப்பதாலல்லவா? மது குடிப்பது போன்ற காணொளிகள் விற்பனை யாகின்றனவா? நிச்சயமாக இல்லை. ஆனால் உடலுறவுக்காட்சியைப் படமாக்கி விற்பனை யாக்கின்றனர். ஏன்? காணமகிழ்தல் காமத்திற் கிருப்பதாலல்லவா? நாம் குடும்பத்துடன் தொலைக்காட்சி பார்க்கும்போது ஏதாவது கவர் ச்சி ஆபாசபடக்காட்சிகள் வரும்போது 'மாத்து மாத்து' என அடுத்த சனலுக்குப் போகிறோம். ஆனால் மது விளம்பரங்களோ அன்றி மது அருந்துவது போன்ற காட்சிகள் வந்தால் அடுத்த சனலுக்கு மாத்துகின்றோமா? இல்லை நாம் இன்று அன்றாடம் சந்திக்கும் பிரச்சினை யை எவ்வளவு அழகாகச் சொல்லிச்சென்றான் வள்ளுவன். எங்கே மீண்டும் ஒரு முறை குற ளைப் பொருள் உணர்ந்து சுவையுங்கள்.

'உள்ளக்களித்தலும் காணமகிழ்தலும்
கள்ளுக்கில்லை காமத்திற்குண்டு'

> சுதந்திரம் என்பது என்ன? நீ எண்ணியபடியெல்லாம் செய்வதற்கு இருக்கும் உரிமையல்ல. எண்ணியதைச் சொல்வதற்கு அடையும் உரிமையே சுதந்திரம்.

# ஐயோ! கடவுளே!

## உலகநேயன்

கடவுளே!
பட்டினியால் இறந்து கொண்டிருக்கும்
பச்சிளங் குழந்தைகளை
பார்த்திருப்பீர்கள்.
இறந்த பின்பு தின்னக்காத்திருக்கும்
கழுகுகளையும் பார்த்திருப்பீர்கள்.
மனிதக் குழந்தைகளை படைத்தவரும்
நீங்கள்தான்.
கழுகுகளை படைத்தவரும் நீங்கள் தான்.
ஆக்குபவரும் நீங்கள் தான்
அழிப்பவரும் நீங்கள் தான்
ஏன் கடவுளே! இப்படி
ஆக்கி அழிக்கின்றீர்கள்?
எல்லா உயிரினங்களின் மூலமும் நீங்கள்தான்
என்னைப் படைத்தவரும் நீங்கள்தான்
என்னை கேள்வி கேட்க வைப்பவரும்
நீங்கள்தான்
எனது கேள்விகள் எனக்கானவையல்ல
மனித குலத்திற்கான கேள்விகள்.
மழையின்மையால் பட்டினி என்கிறார்கள்.
மழையை பெய்விப்பவரும் நீங்கள்தான்.
ஐரோப்பாவிற்கு வெள்ளத்தை
கொடுக்கிறீர்கள்.
ஆபிரிக்காவிற்கு வரட்சியை கொடுக்கிறீர்கள்.

ஐரோப்பாவின் குப்பைத் தொட்டிகளிலே
கொட்டிக்கிடக்கும்
உணவுப்பண்டங்கள்
ஆபிரிக்க மக்களின்
உயிர்களைக் காக்கக்கூடியவை.
வல்லரசுகளை உருவாக்கியவரும்
நீங்கள்தான்
வறிய நாடுகளை உருவ-
ாக்கியவரும் நீங்கள்தான்

இது ஏன்? கடவுளே
மதவாதிகளிடம் கேட்டால்
முற்பிறப்பிற்கான தண்டனை என்பார்கள்.
அவர்கள் கிடக்கட்டும் விடுங்கள்.
நீங்கள் சொல்லுங்கள்
உயிர்களை ஆக்கியவர் நீங்களென்றால்
உயிர்களை இப்படி அழிக்க மாட்டீர்கள்.
கடவுளே!
எனக்கு கோபம் கோபமாக வருகிறது.
அந்த உணர்வைத்தந்தவரும் நீங்கள் தான்
கடவுளே!
உலகில் மக்கள் கிளர்ச்சிகள் நடக்கின்றன.
வல்லரசுகள்தான் பின்னனி என்கின்றார்கள்
கடவுளே நீங்கள் எந்த அணியைச் சேர்ந்தவர்?
மக்களின் அணியைச் சேர்ந்தவரா?
வல்லரசுகளின் அணியைச் சேர்ந்தவரா?

கடவுளே!
பதவி விலக மறுத்த சர்வாதிகாரியும்
கொல்லப்படும் கடைசிநிமிடத்தில்
கடவுளே! என அழைக்கின்றார்.
கொன்றவர்களும் கடவுளே!
உங்கள் பெயரைச்சொல்லித்தான்
கொன்றார்கள்.
நீங்கள் கொல்லப்பட்டவரின் பக்கமா?
கொன்றவர்களின் பக்கமா?
கடவுளே!



இந்த இடத்தில்
ஐயோ! கடவுளே
என விழிக்காமல்
எப்படி விழிக்க?

# பிரெஞ்சுப் பெண்களும் நீள்காற்சட்டைகளின் நீண்டபயணமும்

**வி. மோகனதாசன்**

பழையன கழிதலும் புதியன புகுதலும் எந்த விடயத்திலும் இருந்துவிட்டுப் போகலாம். ஆனால் பெண்களின் ஆடைகள் விடயத்தில் புதியன புகுகின்றபோது அதுவும் புரட்சிகரமாக இருந்துவிட்டால் சொல்ல வேண்டியதே இல்லை. அது பிரச்சனைக்குரிய விவாதத்துக்குரிய விடயமாக மாற்றம் பெற்றுவிடும். இது எல்லா நாடுகளுக்கும் பொதுவான விடயம். பிரான்சு நாடு மட்டும் இதற்கு விதிவிலக்கில்லையே!

நீள்காற்சட்டை(Le Pantalon) அணியும் பெண்களை இன்று சர்வசாதாரணமாக நாம் எங்கும் பார்கமுடியும். ஆனால் இன்றைய இந்த நிலையை எட்டுவதற்காக நீண்ட போராட்டங்களைப் பிரெஞ்சுப்பெண்கள் சந்தித்திருக்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா?

Le Pantalon என்பது பிரெஞ்சு மொழியில் ஆண்பால்சொல் இந்த ஆடையும் ஆண்களுக்கேயுரியதாகவே இருந்திருக்கிறது. பால்வேறுபாடுகளின்றி பெண்களும் இந்த ஆடைகளை அணியத்தொடங்கியபோது எங்கே ஆண்களைப் போன்றே சுதந்திர எண்ணம் கொண்டவளாக ஆண்மகனின் இயல்புகள் கொண்டவளாக பெண் மாறிவிடுவாளோ என்ற அச்சம் இருந்திருக்கிறது. (வேறு யாரிடம் ஆண்களிடம் தான்!)

1800 களில் இந்த விசித்திர ஆடையைப் பெண்கள் அணிவதற்கு பாரிஸ் மாவட்ட அரச அதிபரால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 1968 வரை பணியிடங்களில் பெண்கள் நீள்காற்சட்டை அணிவதற்கு தடையிருந்தது. நாடாளுமன்றில் 1976 வரை தடை.

19ம் நூற்றாண்டில் கலையுலக நட்சத்திரங்கள் நீள்காற்சட்டையுடன் நடைபவனி வரத் தொடங்குகிறார்கள். பிறகு சொல்ல வேண்டுமா? அவர்களைப் போலவே தாமும் தோற்றமளிக்க வேண்டும் என்ற ஆசை பெண்களிடமும் தொற்றிக்கொண்டு விடுகின்றது.

முக்கியமாக இன்னொன்றை குறிப்பிட்டாக வேண்டும். 1914 உலகப்போர் காலங்களில் ஆண்கள் போர்முனைக்குச் சென்றுவிட பொருள் உற்பத்தியில் ஆண்களின் இடத்தை நிரப்ப வேண்டிய கட்டாயம் பெண்களுக்கு நேர்ந்து விடுகிறது. தொழிற்சாலைகளில் சீருடையாகவும் ஆனது இந்த நீள்காற்சட்டை. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல சீருடையாய் இருந்த நீள்காற்சட்டை குறுங்காற்சட்டையாகி சீர்குலைந்தது வேறு கதை!

**நன்றி** le novel observateur

மனிதன் சுதந்திரமாகப் படைக்கப்பட்டானென்றால், அவன் தன்னைத்தானே ஆள வேண்டும். மனிதனுக்கு மேலே கொடுங்கோலர்கள் இருந்தால், அவர்களை அவர்களுடைய ஆட்சிப் பீடத்திலிருந்து தூக்கியெறிய வேண்டும்.

# 'அ' க்களும் 'மு' க்களும்

தமிழ்த்தம்பி

இரவு விடுதிக்குள் நுழைந்த போது பத்துமணி ஆகியிருந்தது. இரவு விடுதி களைகட்டத் தொடங்கிவிட்டது. பல வண்ண மின் விளக்கு கள் ஒரு குட்டி செயற்கை சூரியன் போன்று எல்லா இடங்களிலும் ஒளியை பாய்ச்சிக் கொண்டிருந்தது.

ஒளி வீசிக்கொண்டிருந்த குட்டிச்சூரியனால் என் உள்ளத்தில் எந்த விதமான மாறுதலையும் ஏற்படுத்த முடியவில்லை. எங்கள் மனத்திற்கு தானே நினைத்த மாத்திரத்தில் நாங்கள் விரும் பும் காட்சிகளை மனக்கண் முன் நிறுத்தும் ஆற்றலுண்டு. ஆனால் முள்ளிவாய்க்கால் கோரக்காட்சிகளை நான் நினைத்துப்பார்க்க விரும்பவில்லை. நான் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் முள்ளிவாய்க்காலில் இறந்து கிடந்த பச்சிளம் பாலகர்களின் இரத்தம் தோய்ந்த முகங்கள் என் மனக்கிடங்கில் ஒன்றோடு ஒன் றாய்க் குவியலாய் கிடந்தது.

1985க்கு முன்னும் சரி பின்னும் சரி முள்ளி வாய்க்கால் எங்கே இருக்கிறதென்பது எனக்குத் தெரியது. அதை நான் வெட்கத்தை விட்டு சொல்லியாக வேண்டும். தாயகத்தில் வாழ்ந்த போது ஆனையிறவுக்கு அப்பால் நாம் செல்வ தில்லை கொழும்பிற்குத் தேவையை பொறுத்து கடவுச்சீட்டு எடுப்பதற்காகச் சென்று வந்திருக் கின்றேன்.

எமது சொந்த ஊரை விட்டு எங்கும் செல்ல வேண்டிய வாழ்க்கைத் தேவை அப்பொழுது இருக்கவில்லை. எனக்குத் தெரியாத முள்ளி வாய்க்காலுக்காக மனம் மௌனமாக அழுது கொண்டிருக்கின்றது. எனக்குத்தெரியாத முகங் கள் ஆனால் ஏன் மனத்தை அந்த சோக நினைவிலிருந்து என்னால் மீட்க முடியவில் லை. இதைத்தான் தொப்புள் கொடி உறவெ ன்று எம் முன்னோர்கள் பட்டறிவில் சொல்லி யிருக்கிறார்கள் போலிருக்கிறது.

இரவு விடுதிக்குள் இளம் சிட்டுக்கள் அழகுக் கோலமாய் வந்து கொண்டிருக்கின்றன. இனி என்ன விடியும் வரை ஆட்டம் கொண்டாட்டம் தான். குடித்து விட்டெறியும் மதுக்கிண்ணங்க ளெல்லாம் காலில் தட்டுப்படும். கண்ணாடிக் கிண்ணங்கள் வந்து குவிந்து கொணடிருக்கும். மெசினுக்குள் அனுப்பிக்கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிடின் ஆளையும் மூடி விடும். மதுபோத்தல்கள் அறுநூறு ஈரோ விலிருந்து அறுபதினாயிரம் ஈரோவரை விற்கப் படுகின்றன. எனக்கு கிடைக்க போகும் ஒரு நாள் சம்பளம் அறுபது ஈரோமட்டுமே. மலைக் கும் மடுவிற்குமுள்ள வித்தியாசமென்பார்களே, இந்த இடத்தில் அது நல்லாய்ப் பொருந்தும்.

அழகுக் கோலம் காட்டி ஆடிக்கொண்டிருக்கும் இளம் சிட்டுக்களின் முன்னோர்களும் முதாலம் இராண்டாம் உலக மகா யுத்தத்தின் கொடூரங் களை அனுபவித்தவர்கள்தான். ஆனால் அவ ர்கள் போராடப் பிறந்தவர்கள். இவர்கள் அனுப விக்கப் பிறந்தவர்கள். முள்ளிவாய்க்கால் மக்க ள் போராடப் பிறந்தவர்கள். நாங்கள் சோகங்க ளோடும், பொறுப்புக்களோடும் வாழப்பிறந்தவர் கள்.

ஒரே வானம் ஓரே பூமி<br>
பூமித்தாய் மக்கள்<br>
யாதும் ஊரே யாவரும் கேளீர்

என அழகு தமிழில் கவிதை வேணுமென்றால் எழுதி மனம் மகிழ வாசித்துப் பார்க்கலாம். ஆனால் இன்றைய உலகம் அப்படியா இருக்கிறது?

பாரிசில் இசைக்கேற்ப நடனம் ஆடும் பொழுது சிறீலாங்கா அரசாங்கம் போர்ச்சன்னதம் கொண்டு தமிழ்மக்களின் உயிர்களை கொன்றாவது நிலங்களை ஆக்கிரமித்து விடவேண்டுமென்று அதிபயங்கர குண்டுகளை வீசிக்கொண்டு இருக்கிறது.

மூளை முழுக்க முள்ளிவாய்க்கால் இருந்தாலும் எனது கைகளுக்கு 1985 இலிருந்து கோப்பைகளையும், கிண்ணங்களையும் கழுவிய அனுபவம் கண் எங்கிருந்தாலும் கை தன்பாட்டில் வேலைசெய்யும். விடிந்து ஆறு மணியாகி விட்டதென தமிழ்க் கூட்டாளி சொன்னபோது தான் நேரத்தை பார்த்தேன். உடல் வேலையால் களைத்திருந்தது. உள்ளம் முள்ளிவாய்க்கால் சோகத்தால் களைத்திருந்தது. தலை சற்று இடிக்குமாப்போல் இருந்தது. இவ்வளவு சோகத்திலும் ஒரு நாள் வேலை முடிந்ததில் மனதின் ஒரு மூலைக்குள் ஒரு சின்ன மகிழ்ச்சி. வீடு திரும்புகின்றேன். வீடு திரும்பியும்தான் என்ன? தமிழ்த் தொலைக் காட்சியைப் பார்த்துப் பார்த்து அழுது கொண்டிருக்கும் மனைவியின் முகத்தை நான் பார்க்க வேண்டும்.

**தொடரும்...**

நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் நான் மறுக்கிறேன். ஆனால் அதைச் சொல்ல உனக்குள்ள உரிமைக்காகச் சாகும் வரை போராடுவேன்.
மனிதன் என்பவன், தன் செயல்களுக்குத் தானே பொறுப்பாளியாகவும், தன் மனச்சாட்சியையே நீதிமன்றமாகவும் கொண்டுள்ள ஒரு சுதந்திரப் பிரதிநிதியாவன்.

— வால்டேர் —

# எது ஊனம்?

சபா அருள் சுப்பிரமணியம்

உடலின் குறைபாடுள்ளவரை
ஊன முற்றோர் எனக்கூறும்
மடமைக் கருத்தை மாற்றிடுவோம்!
மண்ணில் அவரை மதித்திடுவோம் !!

அங்கம் குறைந்த நிலைமையிலும்
அழகாய்த் துணிந்து செயலாற்றிப்
பங்க மின்றி வாழ்பவரைப்
பாரி லென்றும் போற்றிடுவோம்!

நம்பிக் கையொடு வாழ்கின்ற
நல்லவர்க் கென்றும் உதவிடுவோம்!
நம்பிக் கைதர முன்வருவோம்!
நம்பணி அதுவென ஏற்றிடுவோம்!!



மனது சோர்ந்து இருப்பவர்கள்
மனதில் நிறைவு கொள்ளாதோர்
நினைவிற் சுயநலம் உள்ளோர்தாம்
நித்தம் ஊன முற்றவராம்!

அடுத்தவர் வாழத் தொண்டாற்றி
அவையவம் இழந்த தோழர்களை
மதித்திட நாங்கள் பழகிடுவோம்!
மறுவாழ் வளித்து மகிழ்ந்திடுவோம்!!

# மனிதனுக்குத் தேவை தன்னம்பிக்கை

கோ.வீ.இராஜேந்திரன்

ஒரு மனிதனுக்குத் தேவை தன்னம்பிக்கை மட்டும்தான். தன்னம்பிக்கையே அவனை ஒரு வேகத்தில் செயல்பட வைத்துத் தடைகளையும் தாண்டி, வலிமையுடன் வெற்றியைச் சந்திக்க வைக்கிறது. எல்லா கவலைகளையும் மறக்க வும் கவலையே இல்லாமல் வாழவும் தன்னம்பி க்கையுடன் சிந்தியுங்கள். வழி பிறக்கும்.

தன்னம்பிக்கை பெற ஒரு வழிஉண்டு. தினமும் ஐந்து நிமிடங்கள் தனிமையான இடத்தில் சத்த மாக 'என்னால் செய்து முடிக்க முடியும்' என்று வேகமாக சொல்லி வாருங்கள். அடுத்து ஐந்து நிமிடங்கள் வேகமாக நடந்து செல்லுங்கள். இந்தப் பத்து நிமிடங்கள் ஒவ்வொரு நாளும், உங்கள் வாழ்க்கையையே மாற்றி உற்சாகம், முன்னேற்றம், வெற்றி என்று அழைத்துச் செல்லுகிறதா? இல்லையா? என்று பாருங்கள்.


ஒவ்வொரு நாளும், நான் தன்னம்பிக்கையுடன் இருக்கிறேன். தன்னம்பிக்கையுடன் செயல்படு வேன் என்று சொல்லுங்கள். அதற்கு ஏற்ப ஒவ் வொரு நாளும் தன்னம்பிக்கையை வளர்த்து கொள்ள முதல் வரிசை இருக்கையிலேயே அமருங்கள். எல்லோரிடமும் அவர்கள் கண் களைப் பார்த்தே பேசுங்கள். எப்போதையும் விட 25 சதவிதம் வேகமாக நடந்து செல்லுங் கள். முணுமுணுக்காமல் கம்பீரமாகப் பேசுங் கள். ஒவ்வொரு நாளும் இந்த பயிற்சி உங்க ளை மனிதனாக மாற்றுகிறதா? இல்லையா? எனப் பாருங்கள்.

- ராபர்ட்டோ ஆஸாசியோஸி -

# புடம்

நன்றி கவிஞர் காசியானந்தன்

காட்டில் இருந்த மூங்கில் ஒரு நாள் கத்தியால் வெட்டப்பட்டது. நெருப்புக்கம்பி தன்னைத் துளைத்தபோது 'ஐயோ உடல் புண்ணாகிறதே' என்று கதறி அழுதது.



கொஞ்சம் பொறுமையாக இரு! மூங்கிலைப் பார்த்து ஆறுதல் சொன்னது காற்று.

மேடையில் உலகமே மயங்கும் இசையை அள்ளிப் பொழிந்து கொண்ருந்த புல்லாங்குழலைப் பார்த்து மேனி சிலிர்த்தது காற்று.

அது சொன்னது -

'புண்பட்டவன் பண்பட்டவன்!'

## கல்வி என்பது...

## சாதாரணம் என்பது...

ஜே.கிருஸ்ணமூர்த்தி

கல்வி என்பது நூல்களிலிருந்து மட்டும்அறிவது அன்று. சிலவற்றை மனப்பாடம் செய்வதுமன்று ஆனால், எவ்வாறு ஒன்றை நோக்குவது, எவ் வாறு கேட்பது என்பதை அறிவதும், உண்மை யோ அல்லது பொய்யோ, நூல்கள் என்ன கூறு கின்றன என்பதை கேட்பதும் ஆகும். தேர்வில் வெல்வது, பட்டம் பெறுவது, வேலை தேடிக் கொள்வது, மணந்துகொண்டு வாழ்க்கையைத் தொடங்குவது மட்டும் கல்வியல்ல. பறவைகளு க்கு செவி கொடுப்பது, வானத்தை நோக்குவது, மரங்களில் உள்ள அசாதராண அழகைப் பார் ப்பது மற்றும் அவற்றோடு சேர்ந்து உணர்வதும் உண்மையில் அவற்றுடன் நேரான தொடர்பு கொள்வதும் கூடக் கல்வி.

மற்ற மனிதர்களைப் போல கவலை, ஊழல், வன்மை, கொடூரம், அலட்சியம், இரக்கமற்ற தன்மை இவற்றுடன் வேலையை வேண்டி வேலையிலேயே பிழைப்பை வேண்டி, திறமை இருந்தாலும், இல்லாவிட்டாலும் வேலையிலே யே சாவதற்குத் தயாராக இருப்பது, இது சாதா ரணம் என்று அழைக்கப்படுவது, புதிதாக ஒன் றும் இல்லாமல், புதுமையாக இல்லாமல் வாழ் வில் மகிழ்ச்சியில்லாமல், கூர்மையாக, இல்லா மல் தீவிரமாக, பேரார்வம் ஆக இல்லாமல் எதுவாக நாம் மாறிக் கொண்டிருக்கின்றோம்? என்பதை உணராமல் இருப்பது, இதைத்தான் நான் சாதாரணம் என்கிறேன். அது இயந்திர முறையில் வாழும் வாழ்வு. அது ஒரு செயல் வட்டச் சலிப்பு.

# சுவையான செய்திகள்

எஸ்.சங்கரன்

### விநோதப் போராட்டம்

அமெரிக்காவில் சென்ற நூற்றாண்டில் ஒரு வேலை நிறுத்தம் நடந்தது. இது எப்படி ஏற் பட்டது தெரியுமா? ஒரு மில் முதலாளி மற்றொ ருவனுடைய அழகான மனைவியுடன் தகாத உறவு கொண்டு அவளுக்காகத் தமது செல்வத் தை வாரியிறைத்துக் கொண்டிருந்தார். அவரு டைய மனைவி எவ்வளவோ மன்றாடியும் கணவர் கேட்பதாக இல்லை. மனைவி மில் தொழிலாளர்களை அதிக கூலி கேட்டுப் போரா டுமாறு தூண்டி விட்டாள். போராட்டத்திற்கு அவளே தலைமை வகித்தாள். போராட்டம் வெற்றிபெற்றது. தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு கிடைத்தது. மில் முதலாளி தன் மனை வியை விவாகரத்துச் செய்து அவளைக் கை விட்டு விட்டார்.

# வளரும் பயிர்கள்

# புதிய எழுத்தாளருக்கானது...

## உறவு

அடிவயிற்றில் இருந்து உதித்தது அன்னை உறவு.
வீரம் விவேகத்தின் மணித்துளியாய்ப் பிதா உறவு.
அன்பு காட்டி அரவணைக்க சகோதர உறவு.
ஆத்திரத்தித்திற்கு உதவிட அயலவர் உறவு.
சுற்றம் சூழச் சேர்ந்திட சொந்த உறவு.
நாலும் பேசிட நண்பர்கள் உறவு.
சொத்து சுகத்தால் சேர்ந்தது இல்லற உறவே.

## ஆனந்தம்

அளவான சுமை
நிறைவான பயணம்
அளவான ஆகாரம்
ஆரோக்கியமானது
அமைதியான சிந்தனை
ஆரோக்கியமான செயல்
அளவான வீடு
ஆனந்தமான வாழ்க்கை
அமைதியான ஆராய்ச்சி
கூர்மையானது
அமைதி ஆன்மீகத்தின்
அத்திவாரம்

## மனத்தின் இடிமுழக்கம்

நீர் எந்தக் குடிமகன்? உலகக்குடிமகன். ஆனால் அகதிக்குடிமகன். தமிழ்க்குடிமகன் எமக்கு பெரும் கவலை, ஏக்கம் என்ன? எம்மை எமது பிள்ளைகள் கடைசி நேரத்தில் பார்ப்பார்களா என்பதே!

அதற்கான விடையென்ன? நாம் எமது பெற்றோரை எப்படிப் பார்த்தோம் என்பதே!
இன்றுவரை உலகு உயிருடன் இருக்குதே அதன் மூல காரணம் என்ன? தாயக்குலமே!

ரயில் பாதைத் தண்டவாளத்தை உடைந்த கல் கொண்டு அமைப்பதன் காரணம் என்ன? அதிர்வைக் குறைப்பதுடன் பழுது பார்த்துச் சமப்படுத்த இலகுவானது

**அற்புதம்**

## கண்கெட்டவர்

பலசாலி பதம் பார்த்துக் குத்துவார்
கண்கெட்டவர் கண்ட இடத்தில் குத்துவார்
நன்றாகப் பேசுவோர் நளினமாகக் குத்துவார்
கோழை ஒழித்திருந்து குத்துவார்
புத்திசாலி புண்பார்த்துக் குத்துவார்.

**கோ**

## முயற்சி

வாழ்க்கை என்பது போராட்டம்
போராட்டம் என்பது போட்டி
போட்டியில் வெற்றி தோல்வி நியதி
வெற்றியை எட்டியவன் வீரனுமல்ல
தோல்வியை எட்டியவன் கோழையுமல்ல
வெற்றிபெற்றவன் உயருவான்
உயர்ந்தவன் உருவாக்குவான்
தோல்விடைந்தவன் முயற்சிப்பான்
முயற்சி வெற்றியை அளிக்கும்.

**ஜெயந்தி சந்திரராஜா**

# நேசமுள்ள வாசகர்கள்

## நன்றியுடன் நாலுவரி

நன்றி! அழுத்த வாழ்க்கையிலும் உணர்வுகளின் ஊடுருவலுக்கு முகவரி கொடுத்தமை நன்றி! தொழில்நுட்ப விஞ்ஞானவேக உலகத்திலும் விழியின் விம்மல்களுக்கு விடியல் கொடுத்தமைக்கு நன்றி! பாலைவனப் பார் மணலிலும் சலிக்காமல் நின்று நீர் தேடலுக்கு

பாஸ்கரன்! தொழில் ரீதியாக என்னை முகம் பார்த்து கொண்டவர்
பாஸ்கரன்! கலைரீதியாக என்னுடன் கலந்தாலோசித்துக்கொண்டவர்
பாஸ்கரன்! நிஜத்தை தேடி நிழல்களில் என்னோடு கரம்கோர்த்துக் கொண்டவர்
மாற்றலாமே! ஆக்கங்களுக்கு ஏற்ப எழுத்துக்களின் வடிவங்களைப் பதிக்கலாமே! படைப்புகளுக்கு ஏற்ப நவீன ஓவியப்படங்களை இணைக்கலாமே! இளசுகளுக்கு ஏற்ற இளமையின் இன்பப்போலிகளை. இப்படிக்கு

**ஆர்வத்துடன் விடியலன்**

எழுதிய கவிதையை நினைவுக்கவிதையாக இணைத்தமைக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். இது போன்ற பல எழுத்தாளர்களின் ஆக்கங்களை இனி வரும் இதழ்களில் இணைப்பது பெரும் வரப்வேற்புக்குரியதாக இருக்கும். இவ்விதழ் தொடர்ந்து வெளிவருவதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**திருமதி ரமேஷ் சிவரூபன்**


வணக்கவொளி!
வணக்கம் கூறி பூவுலகில் ஒளி பரப்பி
எட்டுத் திக்கிலும் உன் ஆற்றலைப் பரப்பி
தமிழன் புகழ் உலகறிய நீ
காலாண்டின்றி வராம் ஒருமுறை
வரக் காத்திருக்கும் தமிழன்
வாழ்க தமிழ்
வளர்க வணக்க வொளி!

**ச.அகிலன்**

வணக்கவொளி காலண்டிதழின் புதிய வாசகராக நானும் இணைவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்விதழின் ஆசிரியர் வி. பாஸ்கரன் அவர்களின் இந்தப்புதிய முயற்சியை எண்ணிப் பெருமையடைகின்றேன். இவ்இதழானது எல்லா வாசர்களுக்கும் இலகுவாகவும் மிக எளிதாகவும் விளங்கக்கூடிய வகையில் விடயங்களையும் உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் இதழில் எனது கணவர் ரமேஸ் சிவரூபனின் நினைவாக அவர்

வணக்கம் முதலிதழா? நம்பமுடியவில்லை ஆக்கம் அனைத்தும் தரம், சுவை ஒரே மூச்சில் படித்துச் சுவைத்தேன். வணக்கம் காலண்டிதழாகவா? மாத இதழாக இளம் சந்ததியினரையும் கவரக்கூடிய ஆக்கங்களுடன் வெளியாக வேண்டும்.
இது என் பேரவா!

**இரா.இரத்தினகுமார்**


SRI MAHALL
ஸ்ரீ மஹால்
SRI MAHALL
PRODUITS
காதலுக்கு தாஜ்மகால்
சிரித்த முகத்துடன்
தரமான சேவைக்கு
ஸ்ரீ மஹால் பல்பொருள் அங்காடி
197, Rue du Fbg. St. Denis
75010 PARIS
M - La Chapelle ou Gare du Nord
Tel: 01 46 07 83 12

# OCEAN TROPICAL

107, Av Pierre Sémard, 95400 Villiers le bel
Tel: 01 39 94 04 00 Fax: 01 39 33 54 87




இந்து சமுத்திர கடலுணவுகளின்
இறக்குமதியின் மையம்
ஏசியன் இந்தியன்

## OCEAN INDIAN

195, Rue de Fbg St Denis
75010 Paris

Gare du Nord
-La Chapelle

tél: 01 42 09 31 50
fax: 01 42 09 31 60

## OCEAN EXOTIQUE DES ROSIERS

01, Rue de Gasogne
95200 Sarcelles

tel: 01 34 29 76 50
fax: 01 34 29 77 76

## OCEAN DE LA BEAUTE

3, Av Alexis Varagne
95400 Villiers le bel

tel: 01 39 94 04 00
fax: 01 39 33 54 87

## EXO OCEAN

07, Av. Alexis Varagne
95400 Villiers le bel

tel: 01 34 19 46 97